Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 158 | திங்கட்கிழமை | சித்திரை 20 ஆம் நாள் 03 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## நேற்று 1,891

கொழும்பு, மே 3
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அசுர வேகத்தில் அதிகரித்துள்ளது. 15 ▶

# அசுர வேகத்தில் தொற்று நாட்டின் நிலை அபாயம்!

## இந்தியாவின் நிலை வரும் என்று தொற்று நோயியல் பிரிவு அவசர எச்சரிக்கை

கொழும்பு, மே 3
இலங்கையில் நாளாந்தம் ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ளமை தெளிவாகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரிக்குமாயின் இந்தியாவில் ஏற்பட்டுள்ளதைப் போன்றதொரு நிலைமை இலங்கையிலும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. அந்த அபாயத்தைத் தவிர்த்துக்கொள்வதற்கு மக்கள் சார்பில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். 15 ▶

## 9 பேர் மரணம்

கொழும்பு, மே 3
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மேலும் 9 பேர் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.
7 ஆண்களும், 2 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.
இந்த் உயிரிழப்புகளுடன் சேர்த்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின்எண்ணிக்கை696ஆக உயர்வடைந்துள்ளது. (எ22)

## மருத்துவமனை நிறைந்ததால் வீடுகளில் வைத்துச் சிகிச்சை

### இலங்கையில் இந்த நிலை

கொழும்பு, மே 3
இலங்கையில் கொரோனா வைரஸ் நிலைமை மோசமான கட்டத்தை நோக்கிச் செல்கின்றது. காலி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களைத் தமது வீடுகளுக்குள்ளேயே தங்க வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.
ஹபராதுவ 15 ▶

## இந்தியாவை விஞ்சியது இலங்கையில் வைரஸ் வேகம்

### *அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்*

கொழும்பு, மே 3
இந்தியாவை விட இலங்கையில் கொரோனா பரவல் வேகம் அதிகமாக உள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 15 ▶

## வடக்கில் ஏழு பேருக்கு நேற்று தொற்று உறுதி

யாழ்ப்பாணம், மே 3
வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 15 ▶

## 10 ஆண்டுகளின் பின் உதயசூரியன் ஆட்சி!

### *தமிழக முதல்வராகிறார் மு.க.ஸ்டாலின்!*



சென்னை, மே 3
தமிழக சட்டமன்றத்துக்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க.) 10 ஆண்டுகளின் பின்னர் வெற்றிபெற்றது. அந்தக் கட்சியின் தலைவரான ஸ்டாலின் முதலமைச்சராகிறார். தமிழகத்தில் அ.தி.மு.க. கூட்டணியுடன் இணைந்து களமிறங்கிய இந்தியாவின் ஆளும் கட்சியான பா.ஜ.க. பெரும் தோல்வியைச் சந்தித்தது.
தமிழகத்தில் 234 சட்டமன்றத் தொகுதி 15 ▶

## "உதயனில்" கொல்லப்பட்ட பணியாளர்களுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம், மே 3
உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட பணியாளர்களுக்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.
கொரோனாத் தொற்று நிலைமை 15 ▶

## புத்தர் சிலை உடைப்பு ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், மே 3
புத்தர் சிலை ஒன்றை உடைத்தார் என்ற குற்றச்சாட்டில் காங்கேசன்துறை பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 15 ▶

## கிரிக்கெட் பயிற்சிகளில் ஈடுபட்ட 23 பேர் சுயதனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம், மே 3
சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலை மீறி கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்ட 23 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று வடமராட்சி, துன்னாலையில் நடந்துள்ளது. 15 ▶

## பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணருக்கு திடீர் மாற்றல்!

யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் இளஞ்செழிய பல்லவனுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. 15 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவன்சவுடன் இணைந்து அரசுக்கு எதிராக சு.கவிலுள்ள சிலர் கிளர்ச்சி

*மைத்திரி தலைமையிலான அணி முன் பஸில் பகிரங்கக் குற்றச்சாட்டு*

**கொழும்பு, மே 3**
**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு நாம் எப்போதும் உதவுகின்றோம். எனினும், இந்தக் கட்சியிலுள்ள சிலர் அமைச்சர் விமல் வீரவன்சவுடன் இணைந்து அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.**

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச குற்றஞ்சாட்டினார். இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக கடந்த வாரம் பஸில் ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் முக்கிய பேச்சு நடைபெற்றது. இதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார். ஒவ்வொரு மாகாண சபைத் தொகுதியிலும் கட்சி சார்பில் மூன்று வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்று பஸில் ராஜபக்ச முன்வைத்த யோசனையை சுதந்திரக் கட்சியினர் எதிர்த்ததை அடுத்தே அவர் மேற்படி குற்றச்சாட்டை சுமத்தினார். இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த சு.கவின் பொதுச்செயலரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தன்மீதே மேற்படி குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது எனவும், தான் அவ்வாறான கிளர்ச்சியில் ஈடுபடவில்லை எனவும் கூறினார். (ஒ.22)

# மன்னாரில் அனுமதியின்றி மாடு அறுத்து விற்பனை

ஒரு தொகுதி இறைச்சி மீட்பு



மன்னார், மே 3
அனுமதி இன்றி வீட்டில் வைத்து மாடு வெட்டி இறைச்சிக்கடையில் வைத்து விற்பனைசெய்யப்பட்ட இறைச்சி, மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் உள்ள உயிலங்குளம் பகுதியில் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி, மருத்துவர் ரோய் பீரிஸ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர் கே.சி. வின்சன் மற்றும் உயிலங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் ரூபன் றொனி சில்வா ஆகியோர் இணைந்து மேற்படி சட்ட விரோதமான முறையில் வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாட்டு இறைச்சியை மீட்டுள்ளனர். சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதி இன்றியும் மாடு வெட்டுதற்குரிய இடத்தில் வெட்டப்படாமலும், வீடு ஒன்றில் வைத்து சட்டவிரோதமான முறையில் குறித்த மாடு வெட்டப்பட்டுள்ளது. மாட்டு இறைச்சியை விற்பனை செய்ய முயன்ற ஒருவர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் கைதுசெய்யப்பட்டு நேற்று மாலை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.
அவரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது. மீட்கப்பட்ட மாட்டு இறைச்சியை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது- என்றார். (ப-56)

# ஈழத் தமிழர் பிரச்சினைகளில் கரிசனை கொள்ள வேண்டும்!

தமிழக முதலமைச்சராக தெரிவான ஸ்டாலினுக்கு முன்னாள் எம்.பி. சரவணபவன் வாழ்த்து



தமிழகத்தின் சட்ட மன்றத் தேர்தலில் வெற்றியீட்டி தமிழகத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எமது வாழ்த்துக்கள். முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மு.க.ஸ்டாலின், ஈழத் தமிழர் விடயத்திலும், தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழர்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் அவா.
இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
தமிழக சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியீட்டியுள்ளது. அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ளார். அவருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது
தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரு வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. ஈழத் தமிழ் மக்கள் சார்ப்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புதிதாக தமிழகத்தில் உதித்துள்ள ஆட்சி ஈழத் தமிழர்கள் பிரச்சினைகளில் ஆத்மார்த்தமாகச் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம், அவாக் கொண்டுள்ளோம்.
தேர்தல் காலங்களில் ஈழத் தமிழர் பிரச்சினை தமிழக கட்சிகளால் அதிகம் பேசப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகமும் ஈழத் தமிழர்கள் பிரச்சினைகள் தொடர்பில் பேசியிருந்தது. எதிர்காலத்தில் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், உரிய சந்தர்ப்பங்களில் அழுத்தங்களையும் கொடுக்க வேண்டும் என்றும் அன்புரிமையோடு கோருகின்றோம். என்றுள்ளது. (எ)

# கொடிகாமம் சந்தையை திறப்பதற்கு அனுமதி



சாவகச்சேரி, மே 3
கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்ட கொடிகாமம் சந்தையை இன்று மீண்டும் திறக்க சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கியுள்ளனர்.
கடந்த 28 ஆம் திகதி கொடிகாமம் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுவோர் என 43 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் நால்வருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து சந்தை வியாபாரிகளும் நகரப் பகுதி வர்த்தகர்களும் தாமாகவே சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களை கடந்த வெள்ளிக்கிழமை மூடியிருந்தனர். அன்றைய தினம் வியாபாரிகள், , வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் என 169 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படடது.
பரிசோதனைஅறிக்கை வந்த பின்னரே சந்தை திறப்பது பற்றி முடிவு செய்யப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. பரிசோதனை அறிக்கை நேற்றுமுன்தினம் மாலை கிடைத்ததையடுத்து இன்று சந்தையைக் திறக்க சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கியுள்ளனர். (ப-9)

# முல்லைத்தீவில் 2ஆம் மொழியானது தமிழ்




மன்னார்,மே 3
முல்லைத்தீவு மாவட்ட சித்த மத்திய மருந்தகத்தின் பெயர் பலகையில் தமிழ்மொழி இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் சித்த மத்திய மருந்தகம் ஒன்று முல்லைத்தீவு மணலாறு பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அந்த சித்த மத்திய மருந்தகத்தின் பெயர் பலகையிலேய தமிழ் மொழி இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபைக்கு கீழ் உள்ள திணைக்களம் ஒன்றின் மருந்தகத்தின் பெயர் பலகையிலே தமிழ் மொழி இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர். (ப-213)

# வெற்றியீட்டிய தி.மு.க.வுக்கு தமிழ்க் கூட்டமைப்பு வாழ்த்து

தமிழக சட்டசபைத் தேர்தலில் பெரு வெற்றியீட்டியுள்ள தி.மு.க. கூட்டணிக்கும், அந்தக் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவருமான மாவை.சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.
தமிழ் நாட்டின் சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க. தலைமையில் கூட்டணிக் கட்சிகள் பெரு வெற்றி பெற்றமை இலங்கைத் தமிழர்களுக்குப் பெரு மகிழ்ச்சியேதான்.
தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம்.
இலங்கைத் தமிழினமும், தமிழர் தேசமும் விடுதலை பெறுவதற்கும் அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறோம்.
திராவிட இயக்கத் தலைவர் தமிழ் நாட்டு மக்கள் தலைவர் கலைஞர் கருணாநிதியின் கொள்கை வழி நின்று எதிர்காலத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் தமிழகத்தின் வெற்றிக்கும் உழைத்திட, கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், வெற்றி பெறவைத்த மக்களுக்கும் இலங்கைத் தமிழர்கள் சார்பில் எம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம், என்றுள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை இந்திராபுரம் கிராமத்தில் மலசலகூடங்கள் அமைக்கவும்

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

பளை, மே 3

**பளை இந்திராபுரம் கிராமத்தில் வசிக்கும் மீள்குடியமர்ந்த பொதுமக்கள், தமக்கு மலசலகூடங்கள் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.**

கிராமத்தில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் 2020 பெப்ரவரி மாதம் 80 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

குறித்த குடும்பங்களுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனம் மற்றும் இந்திய. ரஹமா நிறுவனம் ஆகியவை, தலா ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தற்காலிக வதிவிடங்களையும், ஆறு பொதுக் கிணறுகளையும் சிறுவர், முதியோர் மற்றும் நோயாளர்கள் உள்ள குடும்பங்களுக்கு பத்து மலசலகூடங்களையும் அமைத்து வழங்கியிருந்தன. ஏனைய குடும்பங்கள் தற்காலிகமாக தமது காணிகளில் மலசலகூடம் அமைத்து பயன்படுத்தி வருகின்றனர். இந்த மலசலகூடங்கள் போதிய வசதிகளைக் கொண்டிராததமையால் அண்மைய மழை காரணமாக பெரும் சுகாதார சீர்கேடுகள் காணப்படுகின்றன.

எனவே தமக்கு நிரந்தர மலசலகூடங்களை அமைத்துத்தருமாறு அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோது, மீளக்குடியமர்ந்துள்ள சில குடும்பங்கள் இந்த வருட வீடமைப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வீடுகள் அமைக்கும் போது மலசலகூடங்கள் அமைத்து வழங்கப்படும். ஏனையோருக்கு மலசலகூடங்கள் வழங்குவது தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டுள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் 2016 மற்றும் 2019 ஆகிய காலப்பகுதிகளில் கட்டம் கட்டமாக வெடிபொருள்கள் அகற்றப்பட்டிருந்தன. அங்கு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது இந்திய ரஹமா நிறுவனத்தால் தற்காலிக வதிவிடங்கள், கிணறுகள், மலசலகூடங்கள் வழங்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நிரந்தர வீடமைப்புத் திட்டங்களுடன் மலசலகூடங்களும் அமைத்து வழங்கப்பட்டிருந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (த-9)

# கொரோனா விழிப்புணர்வு ஒவ்வொருவருக்கும் அவசியம்

## சாவ. பிரதேசசபைத் தவிசாளர் வலியுறுத்து

கொழும்பு, மே 3

கொரோனா தொற்றுத் தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் பாதுகாப்பு என்பது எல்லோருக்கும் முக்கியமானது என்று சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில்,தலைமையுரை ஆற்றும்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்;

நாளொன்றுக்கு நாடளாவிய ரீதியில் சராசரி ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் தேசிய ரீதியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தேசிய ரீதியில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை நீங்கள் அறிவீர்கள் நாடு முடக்கப்படலாம், அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்து வைத்திருங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாமும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. இந்தியாவிலே நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

அங்கு மயானங்கள் எல்லாம் சடலங்களால் நிறைந்து காணப்படுகின்றன. வசதியான ஒரு நாடு இந்தியா. தொழில்நுட்பத் துறைகளில் வளர்ச்சி அடைந்த நாடு. அவ்வாறான நிலைமை எங்களுக்கு ஏற்படுமாக இருந்தால் எமது நாட்டில் என்ன செய்ய முடியும்?

நாம் ஒவ்வொருவரும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்த பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். பாதுகாப்பு என்பது எல்லோருக்கும் முக்கியமானது. அனர்த்தங்கள் ஏற்படாத வகையில் எல்லோரும் செயற்பட வேண்டும் -என்றார். (ப-159)

# வவு. மருத்துவமனையில் இரண்டாம் கட்ட தடுப்பூசி





வவுனியா, மே 3

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை இரண்டாவது கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இந்தியா மற்றும் சீனா நாட்டு அரசாங்கங்களால் இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு மாவட்டங்களிலும் தேவையின் பொருட்டு பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை சுகாதாரத் துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்துக்கு இரண்டாவது கட்டமாக ஆயிரத்து 500 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக 140 நபர்களுக்கும், இரண்டாம் கட்டமாக 321 நபர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. இரண்டாம் கட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர், மருத்துவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் துறையினர் மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிகள் உள்ளிட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (ஐ-18)

# ஹெரோய்ன் வைத்திருந்த நபருக்கு தண்டமும் சீர்திருத்த பணியும்

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நபருக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அவரை 100 மணித்தியாலங்கள் சமூக சீர்திருத்தப் பணியில் இணைக்குமாறும் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் அடம்பன் பொலிஸாரால் 50 மில்லிக் கிராம் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முற்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேகநபர் நீதவான் முன்னிலையில் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து. இவ் நபருக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், மூன்று மாதங்களுக்கு சாதாரண சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. சிறைத் தண்டனை அனுபவிக்க விருப்பம் இல்லை எனில் 100 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும் என மன்று கட்டளை பிறப்பித்தது. (ஐ-60)

# மிகுதிப் பணம் கேட்டதால் இருவர் மீது தாக்குதல்

பணக் கொடுப்பனவு சர்ச்சை காரணமாக தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் மிருசுவில் கெற்பேலி பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியைச் சேர்ந்த நபர், தனது வாகனத்தை அங்குள்ள ஒருவருக்கு விற்பனை செய்து ஒரு தொகுதி பணத்தை வாங்கியுள்ளார்.

மிகுதிப் பணத்தைக் கேட்டு பலதடவைகள் சென்ற போதும் மிகுதிப் பணம் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு இன்னொருவருடன் சென்று. பணத்தைக் கேட்ட போது வாகனத்தை வாங்கியவரும் அங்கு நின்றவர்களும் பணம் கேட்கச் சென்ற இருவரையும் சரமாரியாகத் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)





# நூல்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, மே 3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நீதி நூல்கள் மற்றும் துணைநூல்கள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் த.மோகனராசா மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் க.வினோ ஆகியோரின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன் கலந்துகொண்டு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிடம் நூல்களைக் கையளித்தார். (சு-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணச் சடங்குகளை முற்றாகத் தவிருங்கள்

*தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு அறிவுறுத்து*

மன்னார், மே 3

மத நிகழ்வுகள் மற்றும் மரணச் சடங்குகள் போன்ற பொது நிகழ்வுகளுக்குச் செல்வதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று மன்னார் பிராந்திய தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு மருத்துவ அதிகாரி மருத்துவர் க.சுதாகர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுடன் தொடர்புகளை பேண வேண்டாம் என்றும் அவர் மன்னார் மாவட்ட மீனவர்களிடம் அறிவுறுத்துகின்றார்.

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 5 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டு 342 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சென்ற ஏப்ரல் மாதத்தில் மட்டும் 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 10 பேர் கடந்த ஒரு வாரத்தில் அடையாளம் காணப்பட்டவர்கள். எனவே தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதனால் பொதுமக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இந்தக் கொரோனாத் தொற்றானது இளைஞர் யுவதிகளை அதிகமாகத் தாக்கி வருவதால் மருத்துவமனைகள் நிரம்பி வழியும் நிலை காணப்படுகின்றது. எனவே தேவையில்லாமல் பொதுமக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குத்திரும்பிய ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற சட்ட விரோத நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள், அவற்றை உடனடியாக நிறுத்தி, கொரோனா தடுப்புச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கவேண்டும். தற்போதைய கொரோனாத் தொற்றானது காற்றின் மூலம் பரவக்கூடியது என்று கண்டறியப்பட்டுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் மக்கள் நெருக்கமாக ஒன்று கூடுவதைத் தவிர்த்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் உரிய முறையில் வாய்க்கும் மூக்குக்கும் சேர்த்து கவசத்தை அணிந்து இன்னும் இரண்டு வாரங்களுக்கு இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் பொழுது இந்தக் கொரோனாத் னாதொற்றிலிருந்து விடுபட முடியும். - என்றார். (த-213)

# போராட்ட உரிமையைப் பறிப்பது பேச்சுரிமையை மீறும் செயற்பாடு

*அரச அடக்குமுறைகளை கண்டிக்கிறது ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு*

**கொழும்பு, மே 3**

**அமைதி வழியிலான போராட்டங்களை நிகழ்த்துவதற்கான உரிமையைப் பறிப்பதானது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் பேச்சுரிமை சுதந்திரத்துக்கான உரிமையை மீறும் செயற்பாடு என்று ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பில், அந்த அமைப்பு அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்ற ச் சாட்டில், பிரமுக வாகன தொடரணி காரணமாக பிரதான சாலையில் போக்குவரத்தை நிறுத்துவதற்கு எதிராக அமைதியான முறையில் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய பத்தரமுல்ல பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். இந்தச் செய்தி ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது. இது போன்ற கைது நடவடிக்கைகள் காரணமாக பொதுமக்களின் அமைதி வழிப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை மற்றும் சுதந்திரம் மீறப்படுவதுடன், பொதுமக்களின் உரிமைகளை மீறும் செயற்பாடுகளுக்கு எதிராக ஊடக கூட்டமைப்பு தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றது.

குறித்த இடத்தில், பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு பிரமுகர் வாகன தொடரணிக்கு சிறப்பு வாய்ப்பு வழங்குவதற்கு எதிராக ஓர் இளைஞர் செயற்படும் விதத்தைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் இரவில் பிரதான வீதியில் செல்லும் அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையானது எந்தவோர் அவசர தேவைக்கும் அல்லாது, முக்கிய பிரமுகர் வாகன தொடரணிக்கு மட்டுமே. ஆகவே பிரதான வீதி தடுக்கப்பட்டுள்ளதாகக் கூறி அங்கு நிறுத்தப்பட்டுள்ள அனைத்து வாகனங்களின் கொம்புகளை (ஊதுகுழல்) ஒலித்து தனது எதிர்ப்பை தெரிவிக்குமாறு குறித்த இளைஞன் கோரியது காணொலிப் பதிவிலிருந்து தெளிவாகிறது.

ஜனநாயக சமுதாயத்தில், எதிர்ப்பு நடவடிக்கையாவது செய்ய முடியாவிடின் அது ஒரு சிறந்த நிலை அல்ல. மேலும்,அமைதியான முறையில் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுபவர்களை பல்வேறு குற்றச்சாட்டின் பேரில் கைது செய்வதை எந்தக் காரணத்தைக் கொண்டும் நியாயப்படுத்த முடியாது.எனவே, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் பேச்சுரிமை சுதந்திரத்தை உறுதிப்படுத்திச் செயற்படுமாறும், குறித்த உரிமைகளைப் பயன்படுத்துபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை நிறுத்து மாறும் அரசிடம் வலியுறுத்துமாறு அனைத்து மக்களையும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கின்றது. - என்றுள்ளது. (த)

# சந்தேகநபருக்கு மறியல்

சாவகச்சேரி ,மே. 3

32 மில்லிகிராம் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரிபொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நாவற்குழிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை சோதனை நடத்தியபோது 32 மில்லிகிராம் போதைப் பொருளுடன் ஒருவரைக் கைது செய்தனர். சந்தேகநபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஜ-9)

# தொகுதி அமைப்பாளர் பதவி தமிழரசுக் கட்சியில் இல்லை

*நபரொருவரின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு நல்லூர் தொகுதிக் கிளையால் கண்டனம்*

யாழ்ப்பாணம், மே 3

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர் தொகுதி அமைப்பாளராக நபரொருவர் தன்னை அடையாளப்படுத்தி வந்த நிலையில், அவ்வாறு எந்த அமைப்பாளர் பதவியும் தமிழரசுக் கட்சியில் இல்லை என்று கட்சியின் நல்லூர் கிளை தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் நல்லூர் தொகுதிக் கிளையின் கூட்டம் கடந்த மாதம் 24ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் நபரொருவர் சமூக வலைத்தளங்களில் தன்னை கட்சியின் நல்லூர் தொகுதி இணைப்பாளராக அடையாளப்படுத்தி வருகிறார் என்று அறிக்கையிடப்பட்டது. ஆனால், அவ்வாறு எந்தவொரு இணைப்பாளர் பதவியும் தமிழரசுக் கட்சியில் இல்லை என்று கட்சியின் தொகுதிக்கிளை குறிப்பிட்டதுடன் இது தொடர்பில் அறிக்கை வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# யாழ். - கொழும்பு ரயிலில் படுக்கை ஆசன சேவை

*7ஆம் திகதியிலிருந்து ஆரம்பம்*

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் கொழும்பு ரயில் சேவையில் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் படுக்கை ஆசன சேவை (படுத்திருந்து பயணிக்கக் கூடியதான வசதி) ஆரம்பமாகவுள்ளது என்று யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதான அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இரவு நேர தபால் சேவை ரயிலில் இந்த வசதி இணைத்து கொள்ளப்படவுள்ளது. இதற்கென பிறிதொரு பெட்டி இணைக்கப்படவுள்ளது.

இந்த சேவையைப் பெற விரும்புவோர் படுக்கை ஆசன முற்பதிவுகளை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் மேற்கொள்ள முடியும் என்று பிரதீபன் தெரிவித்தார்.

தற்போது கொழும்பிலிருந்து காலை 5.45 மணிக்கு புறப்பட்டு மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து மீண்டும் 1.15மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு 1.37மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும் நகர்சேர் கடுகதி ரயில் சேவை மாத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த சேவை தவிர்ந்த ஏனைய சேவைகள் வழமைபோல் தற்போதுள்ள கொரோனா நிலைமைக்கு ஏற்றவாறு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்று வருகின்றது என்று பிரதீபன் மேலும் தெரிவித்தார். (த-20)

# முகக்கவசம் அணியாதோருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை

வவுனியா,மே.3

வவுனியா நகர வீதிகளில் நேற்று சிறப்புச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸார் முகக்கவசம் அணியாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அந்தவகையில், வவுனியா நகரப் பகுதியில் விசேட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் வீதியில் பயணிப்போர், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்கள், வாகனங்கள் என்பவற்றை இடைமறித்து கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டதுடன் சட்ட விதிமுறைகளை மீறியோருக்கு அவர்களுக்கு எதிராக நேற்று சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. (ஜ-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஊடகமும் ஜனநாயகமும்

இன்று சர்வதேச ஊடக சுதந்திர தினம். நவீன அரசியல் உலகிலும், அதிகாரப் போட்டியிலும் ஊடகங்களின் குரல்வளை பல்வேறு தரப்புக்களால் பலமுறைகள் நசுக்கப்பட்டுள்ளன. பல முறைகள் நசுக்க எத்தனிக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் ஊடகங்களின் சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும் பேணும் பொருட்டும் பாதுகாக்கும் பொருட்டும் அறிவிக்கப்பட்டதுதான் சர்வதேச ஊடக சுதந்திர தினம்.


ஒரு தினம் சர்வதேச அளவில் அறிவிக்கப்படுகின்றதெனில், அது சார்ந்த விழிப்புணர்வு சர்வதேச அளவில் தேவைப்படுகின்றது. அதன் கனதியை உலகம் உணரவில்லை என்றும் அதை அர்த்தப்படுத்தலாம். சர்வதேச புவி தினம், சர்வதேச நீர் தினம் என்பவற்றின் வரிசையில் இந்தக் கருத்தியலுக்கு இருக்கக்கூடிய பிறிதொரு சிறந்த உதாரணம்தான் சர்வதேச ஊடக சுதந்திர தினம்.

இன்று ஊடகங்கள் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் இயங்க அனுமதிக்கப்படுகின்றனவா? என்றால் பதில் இல்லை என்பதே. அமெரிக்க வல்லரசு முதல்கொண்டு ஆப்கான் வரையில் இது வெளிப்படையானது. இந்த வரிசையில் இலங்கை இருந்ததையும் இழந்துள்ளது என்பதுதான் மெய்மை. அதாவது மைத்திரி – ரணில் கூட்டாட்சிக் காலத்தில் இம்மியளவு துளிர் விட்டிருந்த ஊடக சுதந்திரம், தற்போது மீண்டும் அஸ்தமித்துள்ளது என்பது மலையின் உச்சியில் ஏற்றி வைக்கப்பட்ட தீபத்துக்கு ஒப்பானது.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவும், இப்போதைய ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராகவும் இருந்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற ஊடகப் படுகொலைகளும், ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்களும், எச்சரிக்கைகளும், கடத்தல்களும், காணாமல் ஆக்கப்படுதலும் கொஞ்சநஞ்சமல்ல. அரசுக்கு எதிராக எண்ணவோட்டத்தைக் கொண்டிருந்த ஊடகவியலாளர்களின் குரல்கள் துப்பாக்கிச் சன்னங்களால் அடைக்கப்பட்டன. இந்தப் படுகொலைகளுக்கு இன்றளவும் நீதியென்பது கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் நீதிக்குரிய ஒளிக்கீற்று தொலைதூரத்திலேனும் இல்லை.

மைத்திரி – ரணிலின் ஆட்சிக்காலத்தில் ஊடக சுதந்திரமானது 'ஆஹா... ஓஹோ...' என்று மெச்சும்படியாக இல்லாவிட்டாலும் ஓரளவேனும் ஊடகங்களின் சுயாதீனத்தன்மை அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதை ஏற்கத்தான் வேண்டும். இந்த ஆட்சிமாறி தற்போது 2015க்கு முன்னர் இருந்த கூட்டணியான கோத்தாபய – மஹிந்த தரப்பு ஆட்சியிலுள்ள நிலையில் மீண்டும் ஊடகங்கள் அச்சுறுத்தலை நோக்கி நகரத் தொடங்கியிருக்கின்றன. இதன் ஆகப்பெரிய பாய்ச்சலை அண்மையில் ஜனாதிபதி நிகழ்த்தியிருந்தார். தனது உரையொன்றில் அவர், 'சில ஊடக உரிமையாளர்கள் நாட்டை அவர்கள் விரும்பும் வழியில் இயக்க விரும்புகிறார்கள். அது என்னுடன் சாத்தியமில்லை. அவர்களுக்குப் பாடம் கற்பிக்கப்பட வேண்டுமானால் அதனை எவ்வாறு கற்பிப்பது என்பது எனக்குத் தெரியும். ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளேன். நான் ஊடகங்கள் மீது எந்த செல்வாக்கையும் செலுத்தவில்லை. ஊடக சுதந்திரத்தை அவை தவறாகப் பயன்படுத்தினால், சட்டரீதியான தீர்வுகள் உள்ளன' என்று எச்சரித்திருந்தார்.

ஆக, தற்போது ஊடகங்களின் மட்டில் அரசு கொண்டுள்ள எண்ணவோட்டம் அரசின் அதியுச்சத் தலைமை வெளியிட்டுள்ள கருத்துக்களில் இருந்தே நன்கு புலப்படுகின்றது. ஊடகம் என்பது ஒரு ஜனநாயக நாட்டின் நான்காவது தூண். ஜனநாயகம் பேணப்பட வேண்டுமாயின் ஊடகத்தின் சுயாதீனம் முழுமையாக வழங்கப்பட வேண்டியது மிகமிக அவசியம். ஊடக சுதந்திரம் இல்லாத நாட்டில் ஜனநாயகத்துக்கு வாய்ப்பில்லை. இராணுவமே அங்கு எஞ்சிநிற்கும். அதுவே இலங்கையின் நிகழ்காலம்.




# இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு முடிவுகட்டவே கோத்தா வந்தார்

## விமலின் அணி கூறுகின்றது

**கொழும்பு, மே 3**

**"தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக நாட்டிலிருந்து இல்லாதொழிக்கவே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆகவே, இந்த விடயத்தில் அரசு பொறுப்புடன் செயற்படும்."**

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் கப்பல் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர தெரவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் இருந்து மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்த முடியாத துரதிஷ்ட நிலை ஏற்பட்டது.

இந்தமுறை மே தினக் கூட்டத்தை வெகு விமர்சையாக நடத்தத் திட்டமிட்டிருந்தோம். புத்தாண்டு கொரோனாக் கொத்தணியின் காரணமாக உழைக்கும் வர்க்கத்தினரை ஒன்றிணைத்து கூட்டங்களை நடத்த முடியாதநிலை தோற்றம் பெற்றது.

தேசிய சுதந்திர முன்னணியின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் ஒரு நாடு ஒரு சட்டம், அனைவருக்கும் சமவுரிமை என்ற இலக்குக்கு அமைய இந்தமுறை சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றது.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த உழைக்கும் வர்க்கத்தினர் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்று பல்வேறு சவால்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தோற்றம் பெற்றுள்ளன. சவால்களை வெற்றிகொள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட வேண்டும்" என்றார். (த-22)

# வீட்டுத் தோட்டங்களுக்கு மஞ்சள் கன்றுகள் திட்டம்

## ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்



கொழும்பு, மே 3

அனைத்து வீட்டுத் தோட்டங்களுக்கும் மஞ்சள் கன்றுகளை வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஆரம்பமானது.


இதனை ஆரம்பித்து வைக்கும் வகையில், ஜனாதிபதி நேற்றுமுன்தினம் முற்பகல் மிரிஹானவில் உள்ள தனது வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் கன்றுகளை நாட்டினார்.

வீட்டின் மஞ்சள் தேவையை தங்கள் சொந்த வீட்டுத் தோட்டத்திலிருந்து பூர்த்தி செய்வதற்காக, ஒரு குடும்பத்திற்கு 5 மஞ்சள் கன்றுகள் வீதம் 15 லட்சம் குடும்பங்களுக்கு கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன. உயர்தர கன்றுகளை ஒவ்வொரு பகுதியிலும் உள்ள கமநல சேவைகள் மத்திய நிலையத்தில் உள்ள விவசாய திட்ட அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம், என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கட்டுப்பாடுகள் வெசாக் தினத்தில் இல்லையா?

## புளொட் விசனம்



**யாழ்ப்பாணம்,மே 3**

**கொரோனாக் காலக் கட்டுப்பாடுகள், சைவ ஆலயங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டு இருக்கக்கூடாது. கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், நயினாதீவு நாகதீபத்தில் நடத்தப்படும் வெசாக் நிகழ்வுகளுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் கொரோனா பெருந்தொற்று தீவிரமாகப் பரவி வரும் நிலையில், சுகாதாரக் கட்டுப்பாடுகளும் மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், அது சைவ ஆலயங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு இருக்கக் கூடாது. சைவ ஆலயங்களுக்குச் செல்பவர்கள் மட்டுமே கொரோனாவைப் பரப்புவார்கள் என்று இல்லை. நாகதீபம் உள்ளிட்ட ஏனைய மதத்தலங்களிலும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் கொரோனாத் தொற் றைக் கட்டுப்படுத்த முடியும். என்றார். (ம-4)

# தொற்றாளரைக் கண்டறிய புதிய முறைமை பற்றி ஆராய்வு

கொழும்பு, மே 3

கொரோனாத் தொற்றாளர்களைக் கண்டறிவதற்கு புதிய முறைமைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக நனோ தொழில்நுட்ப நிறுவனத்தின் மூத்த ஆய்வாளரும் விஞ்ஞானப் பேராசிரியருமான சஞ்சய பதீகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் வேறு சில நாடுகளில் பி.சி.ஆர். தொழில்நுட்பத்தைவிட வேறு முறைமைகள் ஊடாக கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர். ஆர்.டி.லெம்ப் தொழில்நுட்பத்தை இதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

இந்த முறைமையின் ஊடாக கொரோனாத் தொற்றுத் தொடர்பான பரிசோதனை முடிவுகளை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு குறைந்தளவான பணமே செலவாகும்.

இதற்கான பரிசோதனை உபகரணங்களைத் தயாரிப்பதற்கு தேசிய ஒளடத கட்டுப்பாட்டு அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது. என்றார். (ஒ.இ)

# 12 இடங்களில் சோதனை

கொழும்பு, மே 3

மேல் மாகாணத்துக்குள் உள்நுழையும், மற்றும் அதனை விட்டு வெளியேறும் 12 இடங்களில் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸாரும், முப்படையினரும் ஈடுபட்டனர்.

ஆயிரத்து 102 நபர்களுடன் 526 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றாத 250பேர் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ.இ)

# அம்புலன்ஸைக் கண்டதும் தெறித்தோடிய பக்தர்கள்

கொடிகாமம், மே 3

மீசாலை வேம்பிராய் கலட்டிப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது

இதன் போது நூற்றுக்கு மேற்பட்டவர்கள் திருவிழாவில் கலந்து கொண்டதை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் திருவிழாவை நிறுத்துமாறு அறிவித்துள்ளனர்.

ஆனாலும் பக்தர்கள் அங்கிருந்து கலைந்து வயல்களில் தஞ்சம் புகுந்ததால் 50 பேருடன் தேரை விரைவாக முடிவுக்கு கொண்டுவர அனுமதிக்கப்பட்டது. பொலிஸார் சென்றதும் பக்தர்கள் திரும்பவும் ஒன்று கூட முயன்ற போது அம்புலன்ஸ் வருகை தந்ததை அடுத்து பி.சி. ஆர் பரிசோதனையை மேற்கொள்ள பொலிஸாரே அம்புலன்ஸ் வண்டியுடன் வருகின்றனர் என்று கருதி பக்தர்கள் அங்கிருந்து அகன்றனர் என்று அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர். அதன்பின்னர் 50 பக்தர்களுடன் தேர் இருப்பிடத்துக்கு கொண்டு வரப்பட்டு தேர்த் திருவிழா நிறைவு செய்யப்பட்டது. (ஐ-159)

# குறை கூறவேண்டாம்; முடிந்தால் செய்யுங்கள்

## ஜானக்க வக்கும்புர தெரிவிப்பு

கொழும்பு, மே 3

அரச தரப்பைக் குறை கூறிக்கொண்டிருக்காமல், உங்களால் முடிந்தால் செய்து காட்டுங்கள். இலங்கைக்கு ஒரு தடுப்பூசியேனும் முடிந்தால் பெற்றுக் கொடுங்கள். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது,

கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் மக்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்தையும் செய்து கொடுக்கும்படி ஜனாதிபதியும், பிரதமரும் உரியவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

கடந்த நாள்களில் எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்ததை நாம் கண்டோம். தூதுவர்களைச் சந்திப்பது நல்ல விடயமல்ல.

முடியுமாக இருந்தால் தூதுவர்களுடன் பேசி இலங்கைக்கு ஒரு தடுப்பூசியையேனும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொண்டு வரட்டும்- என்றார். (ம-4)

# பயணிகள் குறைவு: சேவைகள் குறைப்பு

கொழும்பு, மே 3

கொரோனா அச்சம் காரணமாக பெரும்பாலானோர் சொந்த வாகனங்களையே போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதால் தனியார் பேருந்துகள் மற்றும் ரயில்கள் தமது சேவைகளைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளன.

'அலுவலகப் போக்குவரத்துச் சேவையை முதன்மையாகக் கொண்டு தனியார் பேருந்துகள் இயக்கப்படும். 25 சதவீதமாக போக்குவரத்துச் சேவையை தனியார் பேருந்து உரிமையாளர்கள் மட்டுப்படுத்தியுள்ளனர். இவற்றுள் நீண்ட தூர சேவைகளும் அடங்கும்' என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

'பயணிகள் எண்ணிக்கை குறைவடைகின்றது. அதனைக் கருத்தில் கொண்டு ரயில் சேவைகளின் எண்ணிக்கை அடுத்த வாரம் குறைக்கப்படும்' என்று ரயில்வே பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

'பயணிகளின் கோரிக்கைக்கு அமைவாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவைகள் நடைபெறும். மாகாண சாலை முகாமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக சேவை தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்' என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார். (ஒ.இ)

# கட்டுப்பாடுகளை மீறினால் அனுமதிப்பத்திரம் ரத்தாகும்

## பஸ்களுக்கு மீண்டும் எச்சரிக்கை


கொழும்பு, மே 3

கொரோனாத் தொற்றுக்காலக் கட்டுப்பாடுகளுக்கு முரணாக மற்றும் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களின், வீதி அனுமதிப் பத்திரம் காலவரையறையின்றி இடைநீக்கம் செய்யப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சரான திலும் அமுனுகம மீண்டும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் நடத்துநர்கள் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை பஸ்களில் ஏற்ற வேண்டும். அவ்வாறு மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பஸ்களுக்கு ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய நியாயமான பஸ் கட்டண உயர்வுக்கு நாங்கள் அனுமதித்துள்ளோம். கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டில் இருந்த போது, இவ்வாறு இறுக்கமான நடைமுறைகள் இல்லை.

எனினும் தற்போது நிலைமை மோசமாகி விட்டது. எனவே அனைத்து பஸ்களும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். அதேவேளை தொடருந்துத் திணைக்களத்திலிருந்து இதுவரை எந்த முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. இருப்பினும் பயணிகளின் வசதிக்காக ரயில்களின் நேர அட்டவணை திருத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# 4,642 பேர் கைது

கொழும்பு, மே 3

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 4 ஆயிரத்து 642 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் 187 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இவர்களில் அதிகமானவர்கள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்



**மேடம்:** தன்னம்பிக்கை கூடும். கோபம் அதிகம் வராமல் காப்பது நல்லது. வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. செல்வாக்குக் கூடும்

**இடபம்:** செலவுகளைத் தன்னிச்சையாய்க் கட்டுப்படுத்துவீர்கள். தொழில் சூடுபிடிக்கும். புகழ்வேண்டி அலைய வேண்டாம். அதிர்ஷ்டம் பலவகைகளில் அதிகரித்து லாபம் தரும்.

**மிதுனம்:** காலில் அடிபட்டுக்கொள்ளாமல் கவனமாக இருங்கள். மற்றவர் பாராட்டில் மதிமயங்க வேண்டாம். கவலை நீங்கும். நண்பர்கள் என்று நம்பி யாரிடமும் பழக வேண்டாம்.

**கடகம்:** வாழ்க்கைத் துணைக்கு பலவிதமான வேலைகள் வரும். திருமணம், குழந்தைப்பேறு பற்றிய நல்ல செய்தி உண்டு. பதவியின் பொறுப்பு காரணமாக பதில் சொல்ல வேண்டி வரும்.

**சிம்மம்:** குடும்பத்தில் யாருக்கேனும் நடக்கும் அறுவைச் சிகிச்சை பலன் தரும். தாயாருடன் வீண் விவாதம் வராமல் பணிவுடன் இருக்க வேண்டும். நிறைய நண்பர்கள் புதிதாகச் சேருவார்கள்.

**கன்னி:** நிறையப் புண்ணியச் செயல்கள் செய்து மன நிறைவடைவீர்கள். உடல் நலம் பற்றிய அநாவசிய பயம் ஏற்பட்டு உடனே நீங்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புவது நல்லது.

**துலாம்:** பேசும்போது மிகக் கவனமாக வார்த்தைகளைக் கையாளுங்கள். பிடிக்காத செயல்களைச் செய்ய வேண்டாம். கோபத்தைக் கட்டுப்படுத்தும் வழிகளைக் கையாளுங்கள்.

**விருச்சிகம்:** பிடித்தவர்களிடம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். சகோதரர்களால் ஒருபுறம் நன்மையும் ஒருபுறம் கவலையும் உண்டு. பல வகைகளில் அதிர்ஷ்ட வாய்ப்பு வரும்.

**தனுசு:** குடும்ப உறுப்பினர் ஒருவருக்குத் திருமணம் நிச்சயமாகும். உங்கள் குழந்தைகள் மருத்துவப் படிப்புக்கு ஆயத்தமாவார்கள். தன்னம்பிக்கை குறையாமல் கவனமாக பார்த்து கொள்ளுங்கள்.

**மகரம்:** கலகலப்பான சூழல் உருவாகும். மனதில் நம்பிக்கை கூடும். தாயாருக்குக் கோபம் ஏற்படுத்தும் செயலைச் செய்ய வேண்டாம். பேச்சினாலோ, செயலாலோ பிரச்சினை வராதபடி கவனம் தேவை.


**கும்பம்:** அநியாயமாக வீண் பழி சுமத்தினால் கண்டுகொள்ள வேண்டாம். பணம் கொடுக்கவோ, பிணை கையெழுத்துப் போடவோ வேண்டாம். அதிர்ஷ்டம் உள்ளதா என்று முயற்சி செய்யாதீர்கள்.

**மீனம்:** அதிக உழைப்பால் நன்மை வரும். பலவகை லாபம் வரும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சி அடைவார்கள். இரண்டு மூன்று வகை வருமானங்கள் வந்து சந்தோஷம் தரும்.

# சுப்த வஜ்ராசனம்

(கணுக்கால்களின் மீது மல்லாந்து படுத்தல்)

ஸ்ரீ. நதிபரன்
(யோகா போதனாசிரியர்)






இந்த ஆசனத்தின் உச்ச நிலையில் முதுகுப்பகுதி தரை மீது ஓய்வாக இருக்க வேண்டும்.

## செய்(படி)முறைகள்:

1. வஜ்ராசனத்தில் உட்காரவும்.
   (முன்னர் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி)
2. மெதுவாக பின்பக்கமாக சரியவும். சரியும் போது உடலின் முழுப்பாரமும் (முழங்) கைகளினால் தாங்கட்டும்.
   பின் அப்படியே மல்லாந்து படுத்துக் கொள்ளவும். இரு கைகளையும் கூப்பியபடி தலைக்கு மேலாகவோ அல்லது நெஞ்சுபகுதியுடன் வைக்கவும். இது உச்சநிலை. இந்நிலையில் ஆழமாக 1 நிமிடம் வரை சுவாசிக்கலாம்.
3. பின்னர் கைகளை விடுவித்து இடக்காலையும் அதன் பின் வலக்காலையும் விடுவித்துக் கொண்டு ஆரம்ப நிலைக்கு வந்து ஓய்வெடுக்கவும்.

## பலன்கள் :

முதுகுத்தண்டு வலிமை பெறும். சுவாச நோய்கள் தீரும். வயிற்றுப்புற மற்றும் இடுப்புப்புற பகுதிகளிலுள்ள உறுப்புக்கள் உரம் பெறுகின்றன. கால் நரம்புகள், தொடைத் தசைகள் மற்றும் தசை நார்கள் தளர்வடைந்து வலிமை பெறுகின்றன.
கணுக்கால்கள், முழங்கால்கள், முதுகுப் பகுதி என்பவற்றின் இயக்கத்தன்மை அதிகரிக்கும். மலச்சிக்கல், அஜீரணக் கோளாறுகள் குணமாகும். பாதம், கணுக்கால்கள், தொடைகள், எலும்புகள், இடுப்புப் பகுதி என்பவை பலம் பெறுகின்றன.

**குறிப்பு :** இந்த ஆசனத்தில் எவ்வளவு நேரமானாலும் இருக்கலாம். உடல் உபாதைகள் உள்ளவர்கள் [illegible] குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும்.



# ஆடைக்குள் இருக்கும் வேதனை

இந்தியாவில் கொரோனா கோரத்தாண்டவம் ஆடுகிறது. கொரோனாத் தொற்றாளர்கள் மருத்துவமனைகளை நோக்கிப் படையெடுக்கின்றனர். மருத்துவமனைக்கு மக்கள் வந்தாலும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு ஒட்சிசன் தட்டுப்பாடு நிலவுகின்றது. கொரோனவால் மக்கள் துன்பப்படும் அளவுக்கு மருத்துவர்களும் வேதனைப்படுகின்றார்கள்.
மருத்துவர்கள் தொடர் வேலை காரணமாக மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை இந்தியாவில் மாத்திரம் அல்ல, இலங்கையிலும்தான். கொரோனா நோயாளிக்கு சிகிச்சையளிப்பதற்கு மருத்துவர்கள், தாதியர்கள் செல்லும் போது அவர்கள் அணியும் கவச உடையைப் பார்க்கும் போதே பெரும் சுமையாக இருக்கின்றது.
கொஞ்ச நேரத்துக்கு முகத்தில் மாஸ்க் அணிந்திருப்பதற்கு நாம் வேதனைப்படுகிறோம். நாம் அணியும் மாஸ்கைப் போன்று 5 அடுக்கு பாதுகாப்பு கவச உடைகளை அணிந்து கொண்டு மணிக்கணக்கில் மருத்துவர்களும், தாதியர்களும் பணிபுரிகின்றனர். இந்தியாவில் கொரோனா நோயாளிக்கு சிகிச்சையளித்துவிட்டு, கவச உடையைக் கழற்றிய பின்னர் மருத்துவர் ஒருவரின் நிலை எப்படி இருக்கின்றது என்பதை இந்தப் படத்தைப் பார்த்தால்தெரியும். இலங்கையிலும், கொரோனா நோயாளிக்கு சிகிச்சையளிக்கச் செல்லும் மருத்துவர் எவ்வாறான கவச மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் செல்கின்றார் என்பதை விளக்கும் காணொலி ஒன்றும் சமூக ஊடங்களில் வெளியாகியுள்ளது.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | 1 | |
| 6 | 4 | | | | | | | 7 |
| 9 | | | | | 4 | | 8 | 2 |
| | 5 | 6 | | | 3 | | 9 | |
| | | | | 1 | 8 | | | 4 |
| 7 | | 4 | | 2 | 9 | | | |
| | | 1 | 3 | | | | | |
| 4 | | | 2 | | 1 | | 3 | 6 |
| 5 | | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 7 | 3 | 1 | 6 | 5 | 9 | 4 |
| 5 | 6 | 3 | 4 | 9 | 7 | 2 | 1 | 8 |
| 9 | 4 | 1 | 8 | 2 | 5 | 7 | 6 | 3 |
| 2 | 3 | 8 | 6 | 7 | 9 | 4 | 5 | 1 |
| 1 | 9 | 6 | 5 | 3 | 4 | 8 | 2 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 8 | 1 | 9 | 3 | 6 |
| 7 | 8 | 9 | 1 | 5 | 3 | 6 | 4 | 2 |
| 3 | 5 | 4 | 7 | 6 | 2 | 1 | 8 | 9 |
| 6 | 1 | 2 | 9 | 4 | 8 | 3 | 7 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா மூன்றாம் அலை ஆய்வக அறிக்கை தாமதம்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 3**

**நாட்டில் கொரோனாத் தொற்றின் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளைவிட தற்போது பரவும் மூன்றாம் அலை தொடர்பான ஆய்வக அறிக்கையைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்ததாவது,

ஆய்வக அறிக்கைகளை விரைவில் பெற்றுக்கொடுக்க முறையான திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆய்வக அறிக்கைகளின் ஊடாகவும், நோயாளர்களின் தரவுகளின் ஊடாகவும் பதிவாகும் நிலைமையை விட, நாட்டின் தற்போதைய நிலைமை மிகவும் அபாயமிக்கதும் ஆபத்துமிக்கதுமாக உள்ளது.

இரண்டாம் அலையின் போது இருந்த ஆய்வுகூட செயற்பாட்டுத் தாமதம் தற்போதைய மூன்றாம் அலையின் போதும் உள்ளது.

நேற்றுமுன்தினம் ஆயிரத்து 500 தொற்றாளர்களை விடவும் அதிகமான தொற்றாளர்கள் பதிவாகினர். தற்போதைய நிலையைக் கொண்டு எதிர்கால நிலை தொடர்பில் கூற முடியும். பொது மக்களின் நடமாட்டம் அதிகரித்தமையே தற்போதைய நிலைக்குக் காரணம்.

சமூக இடைவெளியைத் தொடர்ந்தும் பேணாமல் செயற்பட்டால் நிலைமை மோசமடையும்.

ஆகவே தேவையற்ற விதத்தில் மக்கள் பொது இடங்களில் நடமாட வேண்டாம். இந்த நிலைமை தீவிரமடை யக்கூடும். என்றார். (ம-4)

# நாட்டை முடக்குவதே தற்போதுள்ள ஒரே வழி

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, மே 3

நாடு மிகவும் ஆபத்தான நிலைமையிலுள்ளது. எனவே நாட்டை முடக்க வேண்டும். பி.சி.ஆர். பரிசோதனையை அதிகரிக்க வேண்டும். இல்லையெனில் தொற்றாளர்கள் இன்னும் அதிகரிப்பர். மருத்துவமனைகளால் கூட சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில், சங்கத்தின் உதவிச் செயலாளர் நவீன் டி சொய்சா தெரிவித்ததாவது,

நாட்டில் தற்போது அவசியமான நடவடிக்கைகளை மட்டுமே எடுக்க வேண்டும். முடக்கல் நிலையால்கூட கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். இவ்வாறான சூழ்நிலையில் அரசு ஏன் அலட்சியத்துடன் மக்கள் நடமாடுவதற்கான சுதந்திரத்தை வழங்கியுள்ளது.

தடுப்பூசிகள் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துகின்ற, பக்க விளைவுகளைத் தடுக்கின்ற ஒரு வழி மாத்திரமே. சில நாடுகள் இன்னமும் தடுப்பூசிகள் வழங்குவதை ஆரம்பிக்கவில்லை. தடுப்பூசிகளைப் பெறுவதும் இலகுவான விடயமல்ல. எனவே மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடக்க நிலைமையையே ஏற்படுத்த வேண்டும் என்றார். (ம-4)

# கொரோனாவால் மட்டக்களப்பில் இருவர் இறப்பு!

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பில் கொரோனாத் தொற்றால் ஆண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் கொரோனா அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 57 வயதுடைய கரடியனாறு கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும், கரடியனாறு கொரோனா சிகிச்சையளிக்கும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# நாட்டில் மேலும் சில பகுதிகள் முடக்கம்!




கொழும்பு, மே 3

நாட்டின் சில பகுதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் அதிகாரப் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தின் ஓர்ஸ் ஹில் மற்றும் அன்புவழிபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

பாணந்துறை தெற்குப் பிரதேசத்தின் வடக்கு வேகட, கிரிபேரிய மற்றும் கிழக்கு பாலமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் நீல தண்டாஹின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. (ம-4)

# கண்டி பயற்சி நிலையத்தில் பொலிஸாருக்கு கொரோனா!

*37 பேர் தனிமைப்படுத்தலில்*

கண்டி, மே 3

கண்டி, குண்டசாலையில் உள்ள பொலிஸ் பயிற்சி நிலையத்தில், இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து 37 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பயிற்சி நிலையத்தில் பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதில் சுமார் 120 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து குறித்த பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளது. குருணாகலுக்கு பயிற்சியாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

# 85,653 பேருக்கு 2ஆவது டோஸ்

கொழும்பு, மே 3

இலங்கையில் இதுவரை 85 ஆயிரத்து 653 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அதற்கமைய, ஏனையவர்களுக்கும் இரண்டாவது தடுப்பூசியைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக முன்னரங்கப் பணியாளர்களுக்கு முதற்கட்டமாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் அவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி நீண்ட தாமதத்தின் பின்னர் தற்போது செலுத்தப்பட்டு வருகின்றது. (ம-4)

# இந்தியாவிலிருந்து படகில் தப்பித்தவர்கள் தனிமைக்கு

புத்தளம், மே 3

இந்தியாவிலிருந்து மீன்பிடிப் படகொன்றில் வருகை தந்து, புத்தளம் வென்னப்புவ பிரதேசத்தில் தங்கியிருந்த இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட அவரின் இரண்டு பிள்ளைகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த பெண்ணுடன் இந்தியாவில் இருந்து வருகை தந்தார் என்று கூறப்படும் மற்றுமொரு பெண் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவின் சென்னை குப்பம் பகுதியில் இருந்து குறித்த பெண், தனது பிள்ளைகளுடன் மீன்பிடிப் படகு மூலம் கடந்த வெள்ளிக்கிழமை புத்தளம் வென்னப்புவப் பிரதேசத்துக்கு வருகை தந்துள்ளார். இது தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர், புத்தளம் வென்னப்புவப் பிரதேசத்தில் அவர் மறைந்திருந்த வீட்டுக்குச் சென்று அவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத்தில் 3 நாள்களில் 2,000 தொற்று

கொழும்பு, மே 3

மேல் மாகாணத்தில் ஏப்ரல் 29 தொடக்கம் மே முதலாம் திகதி வரையான 3 நாள்களில் மட்டும் 2 ஆயிரத்து 213 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாகாணத்தில் ஏப்ரல் 29 ஆம் திகதி 823 பேரும், ஏப்ரல் 30 ஆம் திகதி 610 பேரும், மே முதலாம் திகதி 780 பேரும் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அதேவேளை, 2020 ஒக்ரோபர் 4 ஆம் திகதி தொடக்கம் நேற்று காலை வரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் 35 ஆயிரத்து 208 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 20 ஆயிரத்து 653 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில 7 ஆயிரத்து 856 பேருக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தது. (து-44)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி சிவகாமிப்பிள்ளை நடராசா

முகம் தனைத் தேடுகின்றோம்
சொந்தமென பலபேர் இருந்தாலும்
சொல்லியாற ஓர் மடி அது தாய் மடியே
தன்னலமற்ற அன்பினால்
செதுக்கிய கலையென சிந்தையில் நினைக்கையில்
வலிமறந்து விழிநனைந்து - எங்கள்
இதயம் தன்னில் துயரமதைப் பரவவிட்டு
தவிக்கவிட்டு சென்றது ஏனம்மா
இனி எங்கு தேடினாலும் வையத்துள்
கிடைத்து விடாது எங்கள் அம்மா என்றும்
எங்கள் இதயக் கோயிலிலே
வீற்றிருக்கும் தெய்வமே!
எம்மைவிட்டு 31 நாள்கள் கடந்தாலும் நாம் கடந்து செல்லும்
காலமெல்லாம் உங்கள் நினைவுகளுடன் வாழ்திருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னையின் மறைவுச் செய்திகேட்டு இல்லத்திற்கு வருகை தந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். தொலைபேசி மூலமாகவும். சமூக வலைத்தளங்கள் ஊடாகவும். துயரத்தில் பங்குகொண்ட உறவுகளுக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவி நின்ற அன்பான உறவுகள். நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மலர்வு 20.09.1931 | உதிர்வு 03.04.2021

ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை.
077 329 7364

என்றும் உங்கள் நினைவுடன்
மகள் - வளர்மதி யோகலிங்கம்
(ஆசிரியர்)

# கொரோனா தாண்டவம் நாடாளுமன்றில் விவாதம்!

கொழும்பு, மே 3
கொரோனாத் தொற்று மற்றும் அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நாளை விவாதம் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றம் நாளை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள் ளது.

பிரதான சபை நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெற்ற பின்னர் முற்பகல் 11 மணி முதல் மாலை 5 மணி வரை கொரோனா விவகாரம் தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளது. இது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிரணி கொண்டுவரவுள்ளது.

ஆளும், எதிரணி கட்சிகளின் உறுப்பினர்கள் தத்தம் கருத்துகளை முன்வைத்த பின்னர், விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போது சுகாதார அமைச்சர் அரசின் நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தவுள்ளார். அதேவேளை, நாளை மறுதினம் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு மீதான விவாதம் நடைபெறவுள்ளது. முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணிவரை 10 மணிநேரம் விவாதம் இடம்பெறவுள்ளது. (ஒ.44)

# கண்டாவளைக் கிராமத்துக்கு பஸ் சேவைகள் நடத்தப்படும்

## இ.போ.ச அறிவிப்பு

கிளிநொச்சி, மே 3
கிளிநொச்சி கண்டாவளைக் கிராமத்துக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் வை. கிருஸ்ண குமார் தெரிவித்தார்.

கண்டாவளை கிராமத்துக்கான பஸ் சேவை இடம்பெறாதமை தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தற்போது வெள்ளிக்கிழமைகளில் மட்டும் எமது பஸ் ஒன்று கண்டாவளைக்குச் சென்று புளியம்பொக்கணை ஆலயம் வரை செல்கின்றது. தொடர்ந்து கண்டாவளைக்கான பஸ் சேவையை விரைவில் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றார். கிளிநொச்சி மாவட்டத்தின் பூர்வீகக் கிராமமான கண்டாவளையில் தற்போது 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. பஸ் சேவை இடம் பெறாததன் காரணமாக கண்டாவளை மகா வித்தியாலய மாணவர்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வெலிக்கண்டல் சந்தியில் இருந்து கண்டாவளை சென்று பஸ் திரும்ப வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். (ஐ-13)

# தாக்குதலில் பெண் காயம்

சாவகச்சேரி.மே. 3
தாக்குதலுக்கு இலக்கான 24 வயதுடைய இளம் குடும்ப பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)




# இலங்கைக்கு ஒரு விமானத்தில் 75 பேர்தான் பயணிக்க முடியும்!

கொழும்பு, மே 3
இலங்கைக்கு ஒரு விமானத்தில் பயணிக்க முடியுமான பயணிகள் தொகையை மட்டுப்படுத்துவதற்கு சிவில் விமான சேவைகள் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

நாட்டில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்துள்ளதோடு, வெளிநாட்டுப் பயணிகள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படும் வீதம் அதிகரித்ததைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இன்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணியின் பின்னர் இலங்கைக்கு வரும் விமானங்களில் அதிகூடியதாக 75 பயணிகள் மட்டுமே பயணிக்க முடியும் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 14 நாள்களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்றும், கொரோனா எச்சரிக்கையைக் கருத்திற்கொண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு விமானத்தில் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் உள்ளடங்களாக 75 பேர் மட்டுமே இலங்கைக்குப் பயணிக்க முடியும் என்ற கட்டுப்பாட்டுடன் விமான சேவைகளை இயக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிதண்ணீரை வழங்க முடியாத நிலையில் துணுக்காய் பிரதேச சபை

அதன் தவிசாளர் கவலை



முல்லைத்தீவு, மே 3

முல்லைத்தீவு துணுக்காய் கிராமங்களில் நிலவுகின்ற குடிதண்ணீர் நெருக்கடியைப் போக்க குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம் என்று துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

துணுக்காய் பிரதேசத்தில் எட்டுக்கு மேற்பட்ட கிராமங்களில் தற்போது குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எங்கள் பிரதேச சபையிடம் ஒரேயொரு உழவு இயந்திரம் மட்டும் உள்ளது. இதனை வைத்துக் கொண்டு எட்டு கிராமங்களுக்கும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள முடியாது. இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் துணுக்காய் பிரதேச சபை எதிர்கொள்ளும் வாகன நெருக்கடி தொடர்பாகத் தெரிவித்திருந்தேன். மாவட்டச் செயலகம் குடிதண்ணீர் விநியோகத்துக்கு வாகன ஒழுங்குகள் செய்து தருமானால் நாம் குடிதண்ணீர் விநியோகத்தை உடனடியாக மேற்கொள்ள முடியும்.

இதேவேளை குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள கிராமங்களில் குடி தண்ணீரை நிரந்தரமாக விநியோகிக்க திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆரோக்கியபுரம் கிராமத்தில் நிரந்தரமான குடிதண்ணீத் திட்டம் ஒன்றை கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தோம் -என்றார். (ம-ஐ-13)

புதுக்குடியிருப்பு கள்ளியடி பகுதியில்

# முழுமையாக வேலி அடைத்தாலே 400 ஏக்கரில் சிறுபோகச் செய்கை



வலி.தென்மேற்கு, மே 3

**புதுக்குடியிருப்பு கள்ளியடி பகுதியில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் சிறுபோகச் செய்கை, வேலி அடைக்கப்பட்டே மேற்கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.**

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிழக்கு கள்ளியடி பகுதியில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் அப்பகுதியில் கால்நடை வளர்ப்பில் ஈடு படும் கால்நடை வளர்ப்போருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைப்பதற்கான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கள்ளியடி பகுதியில் முத்துஐயன் கட்டு குளத்தின் கழிவு நீரைப் பயன்படுத்தி நெற்செய்கை வழமையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வருடத்தில் முத்துஐயன்கட்டு குளத்தில் நீர் மட்டம் அதிகமாகக் காணப்படுவதால் இந்த வருடம் குறித்த பகுதி விவசாயிகள் வழமையாகச் செய்கை பண்ணப்படும் அளவை விட தமக்குச் சொந்தமான 400 ஏக்கர் வரையான மேலதிக நிலத்தில் நெற்செய்கையில் ஈடுபட முயற்சி செய்திருந்தனர்.

அதேவேளை வழமையை விட அதிக இடத்தில் நெற்செய்கையில் ஈடுபடுவதால் தமது கால்நடைகளுக்கான மேச்சல்தரை பாதிக்கப்பட்டுவிடும் எனவும் கால்நடைகள் ஆற்றில் இருந்து நீரை அருந்துவது பாதிக்கப்பட்டுவிடும் எனவும் இதன் ஊடாக தமது கால்நடை வளர்ப்பு பெருமளவில் பாதிக்கப்படும் எனவும் கால்நடை வளர்ப்போர் மேற்படி 400 ஏக்கர் வரையான மேலதிக நிலத்தில் நெற்செய்கையில் ஈடுபட எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் இருசாராருக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்குக்கு தீர்வு காணும் நோக்கில் பிரதேச செயலாளர் மேற்படி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இரு சாராரின் பல்வேறு வாதப் பிரதிவாதங்களுடனும், துறைசார் அரச அதிகாரிகளினது கருத்துப் பரிமாற்றங்களுடனும் இடம்பெற்ற இக் கூட்டத்தில் இறுதியில் கால்நடை வளர்ப்போருக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலும், கால்நடைகளின் நடமாட்டத்தை அதிக அளவில் பாதிக்காத வகையியலும் குறித்த 400 ஏக்கர் வயல் நிலங்களுக்கும் வேலி அமைத்து பயிர்ச் செய்கையை மேற்கொள்ள ஒத்துழைப்பதாக இருசாரரது இணக்கப் பாட்டுடன் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு மேற்படி பிணக்கு சுமுகமான முறையில் தீர்த்துவைக்கப்பட்டது. (ப-115)

ஒரு லட்சம் கிராமிய வீதிகள் சீரமைப்பு;

## சாவ. நகரசபையின் வீதிக்கு பதிலாக வேறு வீதி மாற்றம்

வட்டார உறுப்பினரின் செயற்பாடு தொடர்பில் மக்கள் விசனம்

சாவகச்சேரி மே. 3

அரசால், அறிவிக்கப்பட்ட ஒரு லட்சம் கிராமிய வீதிகள் சீரமைப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரி நகரசபையின் வீதியை திருத்தம் செய்ய விடாமல் வட்டார உறுப்பினர் தடுத்து வருவது குறித்து வட்டார மக்கள் கவலை தெரிவித்தனர்.

நகரசபை எல்லைக்குட்பட்ட மண்டுவில் அம்மன் கோவில் வீதியில் (சோலை அம்மன் வீதி ) ஆயிரத்து 500 மீற்றர் தூரத்தை தார்க்கலவை வீதியாக மாற்றுவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பு சபையின் கடந்த அமர்வில் தவிசாளரால் சபையில் முன் வைக்கப்பட்டது. சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 15 கிலோ மீற்றர் நீளமான 12 வீதிகள் கிராமிய வீதி வேலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த உறுப்பினர் இந்த வேலையை மேற்கொள்ளாமல் அதனை நிறுத்தி வைத்து வட்டாரத்தில் உள்ள வேறு வீதிக்கு மாற்ற வேண்டுமெனக் கேட்டுள்ளார். தமது பாவனையில் உள்ள வீதியை சீரமைக்க வழங்கப்பட்ட நிதியை வேறு வீதிக்கு மாற்ற உறுப்பினர் முயற்சிக்கின்றார் என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

கேட்டபோது;

சபை உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப் பட்ட 50 வீதிகளின் விபரங்கள் விசேட அமர்வில் ஆலோசிக்கப்பட்டு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அனுப்பி வைக்கப்பட்டது. இங்கு வந்த அதிகாரிகள், சபையால் வழங்கப்பட்ட 50 வீதிகளையும் பார்வையிட்டு வேலைத் திட்டங்களில் 12 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதென சபைக்கு அறிவித்துள்ளனர். கடந்த அமர்வில் இந்த விடயம் சபையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்த போது சபை உறுப்பினர் க.கஜிதன் தன்னால் அவசியமெனக் கருதிய வீதி வேலைகள் சமர்ப்பிக்கப்பட்டன எனவும் அவற்றில் குறித்த மண்டுவில் அம்மன் கோவில் வீதி மறுசீரமைப்பு வேலைக்கு பதிலாக வேறொருவீதியைச் சீரமைக்க வேண்டும் எனவும் கேட்டிருந்தார். இவ்விடயம் தொடர்பாக நானும் செயலாளரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின். அலுவலகத்துக்குச் சென்று கதைத்தபோது பட்டியல் மேலிடத்திலிருந்து வந்ததால் மாற்றம் செய்ய முடியாது எனத் தெரிவித்தனர். இது தொடர்பாக குறித்த உறுப்பினருக்கு தெரிவித்த போது விசேட கூட்டம் கூட்டுமாறு கோரியுள்ளதால் அடுத்த வாரம் விசேட அமர்வை நடத்தவுள்ளோம் -என்றார். (ப-9)

# இரு குடும்பங்கள் சேர்ந்து பல இடங்களில் கொள்ளை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற 8 கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஐவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்தும், இவர்களால் வங்கிகளில் அடைவு வைக்கப்பட்ட நிலையிலுமாக சுமார் 50 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. இவர்களால் சுமார் 150 பவுண் வரையான நகைகள் கொள்ளையிடப் பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குற்றச்செயல்களின் பிரதான சூத்திரதாரி வட்டுக்கோட்டை சுழிபுரம் பகுதியைச் சேர்ந்தவர். இவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரும் அவருடைய மனைவியான சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த பெண், இவருடைய மருமகன் மற்றும் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் வசிக்கும் இவருடைய சகோதரர், அவருடைய மகன் ஆகியோரே இந்த கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. இவர்களில் 3 ஆண்களும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அவர்கள் கொள்ளையிடும் நகைகளை குறித்த இரு பெண்களும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்து வந்துள்ளனர். கிளிநொச்சி மக்கள் வங்கி உள்ளிட்ட இடங்களில் குறித்த தொகை நகைகளை இவர்கள் அடைவு வைத்துள்ளமையும் தெரியவந்துள்ளது. புதுக்குடியிருப்பில் அண்மையில் இடம்பெற்ற 8 கொள்ளைச் சம்பவங்களும் இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர். கோம்பாவில் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றின் சி.சி.ரி.வி. காணொலி உதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகளின் ஆலோசனைக்கமைய புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அமரசிங்கவின் வழிகாட்டலில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புதுக்குடியிருப்பில் 8 கொள்ளைச் சம்பவங்களிலும், கிளிநொச்சியில் 3 கொள்ளைச் சம்பவங்களிலும் யாழ்ப்பாணத்தில் 2 கொள்ளைச் சம்பவங்களிலும் முல்லைத்தீவில் 2 கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டிருந்தமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.வி.மகாசேனன்



சர்வதேச ஊடக சுதந்திர தினம் இன்று

# சுதந்திரமற்ற சூழலில் ஊடகசுதந்திர தினம்!

இன்று சர்வதேச ஊடக சுதந்திர தினம். ஜனநாயக வெளியில் ஊடகத்தின் வகிபாகம் கனதியான நிலையை பெறுகிறது. ஜனநாயக இருப்பில் ஊடகம் பெறும் முக்கியத்துவத்தினாலேயே ஜனநாயகத்தின் நான்காவது தூணாகவும் ஊடகம் சிறப்பிக்கப்படுகிறது. ஜனநாயகத்தின் கழுத்தை நெரிக்க முற்படும் இலங்கை அரசியல் பரப்பில் பத்திரிகை ஊடகங்களின் சுதந்திரம் கேள்விக்குட்படுத்தப்படுகிறது என்பது துயரமான பதிவாகவே காணப்படுகிறது. இந்த நிலையிலேயே இக்கட்டுரை ஊடக சுதந்திரம் பற்றிய உரையாடல்களுக்கு மத்தியில், இலங்கை அரசியலில் ஊடக சுதந்திரத்துக்கு காணப்படும் அச்சுறுத்தலைத் தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான உலக ஊடக சுதந்திர தினத்தின் மையக் கருத்தாக 'பொது மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை வழங்குவது'" என்பது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தகவல்களை ஒரு பொது நன்மையாக மதிப்பிடுவதன் முக்கியத்து வத்தை உறுதிப்படுத்துவதற்கான அழைப்பாகவும், பத்திரிகையை வலுப்படுத்த உள்ளடக்கத்தின் உற்பத்தி, விநியோகம் மற்றும் வரவேற்பு ஆகியவற்றில் என்ன செய்ய முடியும் என்பதை ஆராய்வதற்கும், யாரையும் பின்னால் விடாமல் வெளிப்படைத்தன்மை மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் இது உதவுகிறதென யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. ஊடக சுதந்திரத்திற்கான உரையாடல்கள் சர்வதேச வெளியில் ஆழமாகக் காணப்படுகின்ற போதிலும், மறுபுறம் உள்ளக மோதல்கள் மற்றும் வன்முறைகளைக் காரணங்காட்டி ஊடக சுதந்திரம் பறிபோகும் நிலையும் சர்வதேச அரங்கில் ஊடக சுதந்திரத்தின் அவலமாகக் காணப்படுகிறது.

**ஊடகப் படுகொலைக்கு நீதி கிட்டுவது எப்போது?**

இலங்கை கடந்த 30 ஆண்டுகளில் உள்நாட்டுப் போரைக் காரணங்காட்டி பல ஊடகவியாலாளர்களை இழந்துள்ளது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்றுவரை அந்த இழப்புகளுக்கு நீதியை பெற முடியவில்லை. இதுவே இலங்கையின் ஊடக சுதந்திரத்தின் நிலையை மதிப்பிட வலுவான சான்றாகிறது.

இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல் இன்றும் தொடர்கிறது. சமீபத்திலும் ஊடகங்களுக்கு ஒரு நெருக்கடியான அச்சுறுத்தலை இலங்கையின் ஜனாதிபதியே வழங்கி இருந்தார். அவர் நுவரெலியாவில் ஆற்றிய உரையொன்றில், 'இது ஒரு மாபியா, நம் நாட்டில் மன்னர்கள் இல்லை, மகாராஜாக்கள் இல்லை. மகாராஜாக்கள் இந்தியாவில் இருந்தனர். சில ஊடக உரிமையாளர்கள் நாட்டை அவர்கள் விரும்பும் வழியில் இயக்க விரும்புகிறார்கள். அது என்னுடன் சாத்தியமில்லை. அவர்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டுமானால் ஒரு பாடத்தை எவ்வாறு கற்பிப்பது என்பது எனக்குத் தெரியும். ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளேன். நான் ஊடகங்களின் மீது எந்தச் செல்வாக்கையும் செலுத்தவில்லை. அவை தவறாகப் பயன்படுத்தினால், சட்டரீதியான தீர்வுகள் உள்ளன. அவர்கள் மட்டுமல்ல, ஒரு தேசிய சித்தாந்தம் கொண்டவர்களும்கூட தவறான செய்திகளை வெளியிட்டுள்ளனர். போரின்போது எங்களுக்கு எதிராகப் பணியாற்றியவர்கள் மீண்டும் தோன்றியுள்ளனர், அவர்கள் அவற்றில் இருக்கிறார்கள்' என்று தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் அந்த அறிக்கை இராணுவ பாணியில் ஊடகங்களுக்கு எச்சரிக்கை விடுவதா கவே அமைந்துள்ளது. ஜனநாயக வழிமுறையில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த ஆட்சித் தலைவர் இராணுவத் தொனியில் ஜனநாயகத்தின் தூணாக உள்ள ஊடகங்களை முடக்கும் வகையில் கருத்துரைப்பது இலங்கையில் ஜனநாயகம் தோற்றுப்போகிறதையே பறைசாற்றக் கூடியதாகும்.

**மீண்டும் வருகின்றதா ஊடக அடக்குமுறை?**

கடந்த காலங்களிலும் இன்றைய ஆட்சியாளர்களின் அன்றைய ஆட்சிக்காலப்பகுதியில் ஊடகங்களின் சுதந்திரம் என்பது கேள்விக்குறியாகவே காணப்பட்டது. 2005-2015ஆம் ஆண்டுகள் காலப்பகுதியில் உலக ஊடக சுதந்திர குறிகாட்டியில் இலங்கை 160க்கும் 170க்கும் இடைப்பட்ட இடத்தையே தொடர்ச்சியாக பெற்று வந்தது.

குறித்த காலப்பகுதியில் இன்றைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது, இலங்கை பத்திரிகை சுதந்திரத்திற்கான 'இருண்ட தசாப்தம்' என்று அழைக்கப்பட்டது, அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதப்படும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் கடத்தப்பட்டனர் அல்லது கொலை செய்யப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் குற்றச்சாட்டு களை ராஜபக்ச சகோதரர்கள் பலமுறை நிராகரித்துள்ளனர். அந்த இறுக்கமான நிலைமை மீளவும் தற்போது உருவாக்கம் பெற்றுள்ளமையையே ஜனாதிபதியின் அண்மைய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.




ஆக, ஊடக சுதந்திரத்தை வெறும் வாய்ச் சொல்லால் புகழ்ந்துரைக்கும் அரசியல் தலைமைகள், ஊடகங்கள் மீது தாம் முன்னெடுக்கும் தலையீட்டை இல்லாமல் செய்தாலே ஊடகம் வாழும். அதன் சுதந்திரம் மேன்மையுறும்.

# மின்தடை

கிளிநொச்சி, மே 3

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கள் காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்**

11 இ.எஸ்.ஆர் இராணுவ முகாம், நந்திக்கடல் 12 சி.எல்.ஐ. நந்தி கடல், 16 இ.எஸ்.ஆர் நந்திக்கடல் வற்றாப்பளை, 59ஆம் பிரிவு இராணுவ முகாம் வற்றாப்பளை, 6ஆவது எஸ்.எல்.ஏ.எஸ்.சி இராணுவ முகாம் நந்திக்கடல், விமானப்படை முகாம் 2 வற்றாப்பளை, விமானப்படை முகாம் வற்றாப்பளை, இராணுவ முகாம் எரிபொருள் நிரப்பு நிலையம், வற்றாப்பளை, வற்றாப்பளை விசேட அதிரடிப் படை தலைமையகம், கேப்பாபிலவு, நாவற்காடு முள்ளியவளை, பிலாக்குடியிருப்பு, வற்றாப்பளை கோவில், மேலும் பிற்பகல் ஒரு மணியிலிருந்து மாலை 5 மணிவரை ஆனந்தர் புளியங்குளம், குளவிசுட்டான் வேளாங்குளம், மதியாமடு (சின்னாசிபரந்தன்), நைனாமடு, நொச்சிக்குளம், பெரியமடு கிராமம், பெரியமடு, இராசபுரம் (லைக்கா கிராமம்), சின்ன அடம்பன், சின்ன பூவரசங்குளம் ஆகிய இடங்களிலும், காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் வீரபுரம், சமணங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தப்பட்டது உணவகம்; முரண்பட்ட ஐந்து ஊழியர்கள் கைது

## வவுனியாவில் சம்பவம்



வவுனியா,மே 3

வவுனியா கொறவப் பொத்தானை வீதி பள்ளிவாசலுக்கு அருகில் அமைந்துள்ள உணவம் ஒன்று சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன்தினம் தனிமைப் படுத்தப்பட்டதுடன், சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் பணிபுரிபவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுப்பதற்காகவும், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்காகவும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு வருமாறு கடந்த இருதினங்களுக்கு முன்பாக பணிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த உணவகத்தில் பணிபுரியும் சிலர் சுகாதார அலுவலகத்துக்கு சமூகமளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது.

இதேவேளை தனிமைப்படுத்தல் செயற்பாட்டை முன்னெடுக்கச் சென்ற சுகாதாரப் பரிசோதகர்களுடன் குறித்த உணவகத்தின் ஊழியர்கள் சிலர் முரண்பட்டிருந்தனர்.

இதனையடுத்து சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஊழியர்கள் ஐந்து பேர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(ப-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வந்தர்களை மட்டுமே பாதுகாக்கின்றது அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

**கொழும்பு, மே 3**

**ஊழியர்களின் உரிமைகளை இல்லாதுசெய்து, அவர்களை அடக்கி, ஒடுக்கி செல்வந்தர்களை திருப்திப்படுத்தும் விதத்திலான முதலாளித்துவ கொள்கையையே தற்போதைய அரசு கடைப்பிடிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமது நாட்டுப் பொருளாதாரத்தின் இதயம்தான் உழைக்கும் வர்க்கத்தினர். நாட்டின் பொருளாதார மேம்பாடு குறித்து கவனம் செலுத்தப்பட்டாலும் ஊழியர்களின் பொருளாதார மேம்பாடு குறித்து உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

எனவே, பொருளாதாரம் உயரும் அதேவேளை ஊழியர்களின் பொருளாதாரமும் உயரவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது செல்வந்தர்களின் கட்சி கிடையாது. அது உழைக்கும் வர்க்கத்தினருக்கான கட்சி, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்குமான கட்சியாகும்.

ஆகவே, மக்களின் மனநிலை, ஊழியர்களின் அர்ப்பணிப்பு, தியாகம் உள்ளிட்ட அனைத்தையும் உணரும் தன்மை எமக்கு இருக்கின்றது. பணத்தால் மட்டும் நாட்டைகட்டியெழுப்பிவிடமுடியாது. அதற்கு ஊழியர் படையணியின் அர்ப்பணிப்பும் அவசியம்.

கடந்த தேர்தலின்போது ஊழியரை ராஜாவாக்குவோம் எனக்கூறி ஊழிய படையணியின் உதவியுடன் தான் தற்போதைய அரசு ஆட்சீபிட மேறியது. ஆனால் இன்று நடப்பது என்ன? ஊழியர்களுக்கான நலன்புரி விடயங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. மாறாக செல்வந்தர்களுக்கு தொடர்ச்சியாக வரிச்சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஊழியர்களின் உரிமைகளை தற்போதைய அரசு மறுக்கின்றது. அவர்களை ஒதுக்கி ஓரங்கட்டுகின்றது. அதுமட்டுமல்ல செல்வந்தர்களை பாதுகாக்கும் திட்டமே தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

மலரவுள்ள எமது ஆட்சியில் ஊழியர்களுக்கு உரிய இடம், அங்கீகாரம் வழங்கப்படும். தற்போதைய அரசு இடைநிறுத்திய சலுகைகள் வழங்கப்படும். 3 ஆயிரம் தொடக்கம் 24 ஆயிரம் ரூபாவரை சம்பள உயர்வு வழங்குவதற்கு திட்டம் உருவாக்கப்படும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் உரிய வகையில் வழங்கப்படும். தனியார்துறை ஊழியர்களுக்கும் கை கொடுப்போம்." -என்றார். (த-44)

# பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் ஓயவில்லை

## ஐ.ம.சக்தியின் மகளிர் அணி அறிக்கை

கொழும்பு, மே 3

இன்று பெண்கள் பல்வேறு வகையான வன்முறைகளுக்கு ஆளாகுகின்றனர். திறமைகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் கிடைக்கப்பெறாமையால், சிலர் நீதிமன்றங்களையும் நாட வேண்டியுள்ளது. அலுவலகங்களில் பெண்கள் பல வன்முறைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டுக்கான அந்நியச் செலாவணி வருவாயின் முக்கிய ஆதாரங்கள் ஆடை, தோட்டத்துறை மற்றும் புலம்பெயர்ந்து உழைக்கும் மக்களாகும். இந்த மூன்று துறைகளிலும் பெரும்பான்மைத் தொழிலாளிகள் பெண்களாவர். ஆடைத் தொழில் துறையில் பெண்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை, அடிப்படை சுகாதார வசதிகள் இன்மை மற்றும் வேலை இழப்பாகும். வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களின் அவலங்களை ஊடகங்கள் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளன. கொரோனா மற்றும் அதை நேரடியாகக் கையாளும் செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கும் தேவையான வசதிகளை வழங்க அரசு தவறிவிட்டது. இன்றும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையேயுள்ள சம்பள முரண்பாடுகளும் தீர்ந்ததாக இல்லை -என்றுள்ளது. (ம-4)

# ரிஷாத்தின் தொடர்புகள்; இந்தியாவும் புலனாய்வு



கொழும்பு, மே 3

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் கேரளா தொடர்புகள் தொடர்பாக இந்தியாவின் புலனாய்வுப் பணியகத்தினர் மற்றும் கேரளா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் ரிஷாத் காசர்கோடுக்குச் சென்றுள்ளார். கேரளாவில் ஒரு சில மதத் தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

அத்துடன் 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக ரிஷாத் இருந்த போது, சென்னைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது அவரைச் சந்தித்தவர்கள் மற்றும் இலங்கை சென்று அவரைச் சந்தித்தவர்கள் தொடர்பில் விசாரணையாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

உளவுத்துறை அதிகாரிகளின் தகவல்படி, ரிஷாத்தின் தந்தை காசர்கோடு பட்னாவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தொடர்ந்து கேரள இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் தற்கொலைதாரியுடன் தொடர்பிலிருந்துள்ளார். அத்துடன் கேரளாவின் பட்னாவைச் சேர்ந்த 5 இளம் முஸ்லிம் குடும்பங்கள் காணாமல் போயிருந்தன. அவர்கள் ஐ.எஸ் அமைப்பில் இணைவதற்கு சிரியா புறப்பட்டனர். தௌஹீத் ஜமாத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

சிலர் சிரியா செல்ல முன்னர் மத போதனைக்காக இலங்கைக்கும் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில் ரிஷாத்தின் கேரளத் தொடர்புகள் ஆராயப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-4)

# சுகாதார நலன்கள் கருதியே மே தினக் கூட்டங்களுக்கு தடை

## கூறுகின்றார் அமைச்சர் குணவர்த்தன

கொழும்பு, மே 3

உழைக்கும் வர்க்கத்தினரது சுகாதார நலனைக் கருத்திற்கொண்டே மே தின கூட்டங்களை அரசு நிறுத்தியது. கடந்த கால அரசுகளைவிட தற்போதைய அரசும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்துள்ளது. கொவிட்19 வைரஸ் காலத்தில் அரச மற்றும் தனியார் ஊழியர்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எதிர்க்கட்சியினர் சொல்வதைப் போன்று செல்வந்த வர்க்கத்தினரது கோரிக்கைக்கு அடிபணிந்து மே தின கூட்டங்கள், பேரணிகள் இரத்துச் செய்யப்படவில்லை. அதற்கான தேவையும் அரசுக்குக் கிடையாது. கொவிட்19 வைரஸ் தாக்கம் தற்போது சடுதியாக அதிகரித்துள்ளது. தொழிலாளர்களின் சுகாதார பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மே தின கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டன.- என்றார். (த-இ)

# அமைச்சர் மஹிந்தானந்தவின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தலில்

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனை அமைச்சர் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். பாதுகாப்புப் பிரிவின் அதிகாரியொருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமையை அடுத்து, "நானும் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சுயதனிமையில் உள்ளோம். குடும்பத்தினருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை" என்று அவர் பதிவிட்டுள்ளார். அதேவேளை அவரது சாரதிகள் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-4-22)

# வல்லரசுகளின் விளையாட்டுக் களமாக நாட்டை மாற்றியுள்ளது கோத்தா அரசு

## இம்ரான் எம்.பி சுட்டிக்காட்டு



கொழும்பு, மே 3

கடந்த காலங்களில் இருந்த அரசுகள் பேணிய நடுநிலைத் தன்மைக்கு புறம்பாக இந்த அரசு எம் நாட்டை வல்லரசுகளின் விளையாட்டுக் களமாக மாற்றியிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், எமது நாட்டை சீனாவின் கடன் பொறிக்குள்ளும் தள்ளியிருக்கிறது. சீனாவின் பொறிக்குள் சிக்கிவிடக் கூடாது என்று சில நாடுகள் எமது நாட்டை உதாரணம் காட்டி பேசும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை அரசு சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சருடைய இலங்கை வருகை விடயத்தில் எந்தவித வெளிப்படைத்தன்மையுடனும் நடந்துகொள்ளவில்லை. என்ன காரணத்துக்காக இந்த வருகை இடம்பெற்றது. இதன் விளைவுகள் என்ன என்பது பற்றிய எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. ஆயினும் இந்தப் பயணத்தால் எமது நீண்ட கால நட்பு நாடான இந்தியாவும் மேற்கு நாடுகளும் அதிருப்தியில் இருப்பதை உணர முடிகிறது. சீனா, உலகின் வலிமையான இராணுவத்தைக் கொண்டுள்ள நாடுகளில் முதலிடத்திலும், உலகில் மிகப்பெரிய இராணுவ பட்ஜெட்டைக் கொண்டுள்ள நாடுகளில் இரண்டாவது இடத்திலும் உள்ளது. சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் என்பவர் அமெரிக்க, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர்கள் தரத்தில் இருக்கும் ஒருவர்.

இவ்வாறான உயர் மட்ட இராஜதந்திரிகள் சாதாரணமாக எந்த நாட்டுக்கும் பயணம் செய்வதில்லை. எனவே இவரது இலங்கைக்கான வருகை மிக மிக முக்கியமான ஒரு காரணத்தைக் கொண்டுள்ளது. எதிர்வரும் நாள்கள் இதை இன்னும் தெளிவாக எமக்கு எடுத்துக்காட்டும் என்று நான் நம்புகின்றேன் -என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த 07 வருடங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றி இன்று (03.05.2021) இருந்து பாதுகாப்பு பரிசோதகராக பதவி உயர்வுபெறும்

**திரு. உதயகுமார் காண்டீபன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மென்மேலும் பதவியுயர்வுகள் பெறவும் சேவைக்காலம் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வாழ்த்துவோர்: பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரி கூட்டுறவுச் சங்கம், யாழ். பல்கலைக்கழகம்.


# காரைநகரில் இன்று முதல் கொவிட் கட்டுப்பாட்டு வாரம்

காரைநகர், மே 4

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் கொவிட் 19 கட்டுப்பாட்டு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் யோ. யதுனந்தனன் அறிவித்துள்ளார்.

இந்த வாரத்தில், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் இணைந்து பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ், இராணுவத் தரப்பினரும் இணைந்து கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளனர். இதன்போது, கொரோனாத் தொற்று குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் கடைகள், சந்தைகள், பஸ்கள், பொது இடங்களில் சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று கண்காணிக்கப்படும். சுகாதார விதிமுறைகளை மீறிச் செயல்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார். (ப)

# சிங்கப்பூருக்குள் நுழைய இலங்கையருக்கு தடை!

கொழும்பு, மே 3

இலங்கையிலிருந்து நீண்ட கால பாஸ் அனுமதி வைத்திருப்போர் மற்றும் குறுகிய கால வருகையாளர்கள் நாட்டுக்குள் நுழைவது தடை செய்யப்படும் என்று சிங்கப்பூர் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வருவோருக்கும் இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூருக்குள் நுழைய முன் அனுமதிபெற்ற அனைவருக்கும் இந்தத் தடை பொருந்தும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு சமீபத்திய பயண வரலாற்றைக் கொண்ட கப்பல் பணியாளர்களின் மாற்றல்களுக்கும் தடை செய்யப்படும் என்று சிங்கப்பூர் தெரிவித்துள்ளது.

இதனிடையே இலங்கையில் கொவிட்19 தொற்று அதிகரித்துள்ளதால் இலங்கையர்கள் இத்தாலிக்குள் நுழைவதை அந்த நாடு தடை செய்துள்ளது.

அதேவேளை இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் தங்கள் பிரஜைகள் இலங்கைக்குப் பயணிப்பதற்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)


# ஆறாம் மாத நினைவலைகள்



மண் மகிழ 11-03-1950 | கண் நெகிழ 05-11-2020

அமரர்
**கணபதிப்பிள்ளை வல்லிபுரநாதன்**
அவர்கள்

ஆறாத ரணங்களை அகிலத்திற் தந்துவிட்டுக்
கூறாமற் சென்றீரே குறையென்ன நாம் செய்தோம்
நீறாகிப் போனாலும் நின்னிழப்பைத் தாங்காது
தேறாத மனத்தோடு தேம்புகிறோம் நாமின்று
கூறாமல் ஒரு தடவை குவலயத்தில் வாராயோ

வாகையடி வீதி,
கல்வயல், சாவகச்சேரி
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

**விஸ்வலிங்கம் கந்தசாமி**



ஐயனார் வீதி, கல்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கந்தசாமி நேற்று (02.05.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கம் லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும், இலட்சுமியின் கணவரும், கமலக்கண்ணன், பிரதீபன், கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதர்சினி (ஆசிரியர், மறவன்புலவு சகலகலா வித்தியாலயம்), கயுராஜ் ஆகியோரின் மாமனாரும், மானுகா, அட்ச்சயா, லதுசன் ஆகியோரின் தாத்தாவும், காலஞ்சென்ற கதிரவேலு, செல்லத்துரை மற்றும் செல்வராணி, றஞ்சினிதேவி, சந்திரவதனா, செல்வநிதி, பிறேமலதா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2021) திங்கட்கிழமை இடம்பெற்று மு.ப 10.30 மணியளவில் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

077 881 3330
076 791 9746

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 19 . 04 . 1955 | மறைவு 02 . 05 . 2021

**திரு. M.S.A.ஒஸ்வர்ல்ட்**
தீவக கோட்டக்கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர்,
கொழும்பு விவேகானந்த தேசிய பாடசாலை ஓய்வுபெற்ற உப அதிபர்

யாழ்ப்பாணம் நெடுந்தீவை பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஒஸ்வேல்ட் அவர்கள் 02-05-2021 தினத்தில் காலமானார்.

இவர், காலம் சென்ற மரிசலின் செபஸ்டியன் மற்றும் செபஸ்டியன் ஆரோக்கியம் அவர்களின் அன்பு மகனும், காலம் சென்ற யுவானிஸ் மற்றும் பிலோமினம்மா அவர்களின் அன்பு மருமகனும், அன்னார் அருள்ஞானசீலியின் அன்பு கணவரும், ரொனிறூவாஸ் (பிரான்ஸ்), சுஜீவ் வெர்ஜினி (சுவிஸ்), ஹரின் ஜானி ஆகியோரின் அன்பு தந்தையும், செபஸ்டியன் சேவியர் (ஜெர்மனி), ஜாயிஸ் செபஸ்டியன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும், உதயன் மற்றும் வலெண்டினா ஆகியோரின் மாமனாரும், அருள்ஞானசீலனின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.05.2021 திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ஜயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4 மணியளவில் பொரளை பொது மயானத்தில் நல்லடக்கம் நடைபெறும்.

தொடர்பு: 0770076789 (ஹரின் ஜானி) 0033758912430 (டொனி ருவாஸ்)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19.04.1957 | மறைவு 22.03.2021

கடந்த 22.03.2021 அன்று
இறைவனடி சேர்ந்த
எமது குடும்ப விளக்கு

**திருமதி புஷ்பராசா றஞ்சினி**



தோற்றம் 20.09.1931 | மறைவு 03.04.2021

கடந்த 03.04.2021 அன்று
இறைவனடி சேர்ந்த
எமது அன்புத் தாய்

**திருமதி நடராசா சிவகாமிப்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.05.2021) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளைமறுதினம் (05.05.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

சுதுமலை வடக்கு,
மதவடி ஒழுங்கை, மானிப்பாய்.

குடும்பத்தினர்
ந.புஷ்பராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டது

திருச்செல்வம் மைக்கல் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (500833017V) A 013522518 சாரதி அனுமதிப்பத்திரமும் தவறவிடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 666 9055

## கடை வாடகைக்கு

No.21 வேம்படி வீதி யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு

077 413 5395

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையுடைய மேசன், கூலியாள், வெல்டர், தச்சர் தேவை.

077 762 6241, 077 985 1946

## வேலையாள் தேவை

தையல் மெசினில் உரப்பை தைக்க ஆண், பெண் தேவை

தொடர்பு: 077 248 7852


# பல இடங்களில் மழைக்கு வாய்ப்பு

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து மன்னார், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காலியில் இருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும் என்றும் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)


## பதவி வெற்றிடங்கள்

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு - 1(அ) தரத்திற்கு வழிகாட்டலும் ஆலோசனையும் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.05.24 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகா ணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவி களுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி.திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாணபொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்.**
03.05.2021


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 • 11 • 1989 |  | 01 • 05 • 2021 |

### கிளபோடாசியஸ் (யம்பிள்) டாளிங்சன்

இல.03, அடப்பன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிளபோடாசியஸ் டாளிங்சன் சனிக்கிழமை (01.05.2021) அன்று காலமானார்.

அன்னார் குருநகரை சேர்ந்த கிளபோடாசியஸ் இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தர்சிகாவின் அன்புக் கணவரும், டள்சினி, டெல்சியா, துவாரகா, டெலிங்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி இன்று (03.05.2021) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.03, அடப்பன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 898 0656**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 22 • 07 • 1964 |  | 20 • 04 • 2021 |

### நமசிவாயம் சுந்தரலிங்கம் இராஜகுமார்

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Du"sseldorfவை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுந்தரலிங்கம் இராஜகுமார் கடந்த 20.04.2021 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சிதம்பரேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், குமாரசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தினி அவர்களின் அன்புக் கணவரும், மோகிதன், பிரியாஸ், சுயென் ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நவஜீவராஜா மற்றும் மல்லிகாதேவி, புஸ்பராசா (சைனிங் ஸ்ரார் உரிமையாளர் - சுன்னாகம்), விஜயகுமார், உதயகுமார் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிற்றம்பலம், மனோரஞ்சிதமலர், கலாரஞ்சினி, தங்கராணி, ஜெயராணி (ஜேர்மனி), சுபத்திரா (ஜேர்மனி), பாஸ்கரன், சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சசிகலாதேவி, சுபாசினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும், கிரிதரன், சாருஜன் (விவசாய போதனாசிரியர் - புத்தூர்), யபர்னா (ஆசிரியர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சிந்துஜா (ஜேர்மனி), ராகுலன் (ஜேர்மனி), விதுசிகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், தனுயா (ஜேர்மனி), கிருசிகன் (ஜேர்மனி), கோபிகன் (ஜேர்மனி), சயனன் (ஜேர்மனி), சாயாகா (ஜேர்மனி), சயித்தா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், சங்கீதா (லண்டன்), தயாரூபி, சயேந்திரராஜ் (லண்டன்), ரேவதி, டிசாந்தன், செந்தூர் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசன திணைக்களம் அனுராதபுரம்), சதீஸ் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமனும், முகுந்தன் (லண்டன்), தர்சன் (ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி) அன்புப் பெறா தந்தையும், அக்சானா (ஜேர்மனி), ஆரோகி (ஜேர்மனி), ராகவி (லண்டன்), கைஸ்னவி (லண்டன்), சுரவி (லண்டன்),கைஸ்ஷனா, லடிஷனா, சௌந்தரீகன், லதுமிகன் (லண்டன்), ஹன்சுஜா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2021) செவ்வாய்க்கிழமை காலை 10.00 - 2.00 மணிவரை Am Krahnap 11, 40229 Du"sseldorf, Germany எனும் இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் மஞ்சத்தடி.**
**021 224 3300, 077 618 6309**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 • 04 • 1950 |  | 01 • 05 • 2021 |

### திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி

(தையல் ஆசிரியை)

கோண்டாவில், ஸ்ரேசன் றோட்டைப் பிறப்பிடமாகவும், நயினாதீவில் வசித்து வந்தவரும், தற்போது ஸ்ரேசன் றோட் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவருமாகிய திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி (01.05.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் சிவசம்பு-கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நயினாதீவு நாகநாதி-காமாட்சி தம்பதிகளின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற நாகநாதி கந்தசாமி (ஓய்வுபெற்ற நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிராம சேவகர்) அவர்களின் அன்பு மனைவியும், தாட்சாயினியின் அன்புத் தாயாரும், தனகீர்த்தனனின் அன்பு மாமியும், தங்கேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவநேசன், குணநேசன், செல்வநேசன், தேவநேசன், மகாதேவன், ரவிநேசன், நவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கமுத்து, சின்னம்மா காலஞ்சென்ற மாணிக்கம், நாகலெட்சுமி, செல்லம்மா, இந்திராணி, மங்கயற்கரசி, செல்வநாயகி, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரேசன் றோட்,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசுர வேகத்தில்...

இவ்வாறு தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியாவில் தற்போதுள்ள நிலைமையைக் கவனத்தில் கொண்டு இலங்கையில் முன்னாயத்தங்களை மேற்கொள்வதன் மூலம் இந்த நிலைமையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அங்குள்ள நிலைமையைப் போன்று ஏற்படக்கூடிய அபாயமும் உண்டு.

தொற்றுக்கான ஏதேனுமொரு அறிகுறி காணப்படுபவர்கள் அவர்கள் வீடுகளிலேயே தங்கியிருக்காமல் மருத்துவமனைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும், ஏதேனுமொரு வகையில் தொற்றாளர் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரிக்குமானால் இந்தியாவில் ஏற்பட்டுள்ளதைப் போன்றதொரு நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இந்த அபாயத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக மக்கள் அவர்கள் சார்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது மிக அவசியமாகும். தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களில் பெருமளவானோர் கடந்த நாள்களில் நுவரெலியா மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்றவர்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் நிலை ஏற்படுமாயின் ஒரு தடுப்பூசியையேனும் வழங்கி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளது- என்றார். (ஒ-22)

## நேற்று...

நாளொன்றில் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் நேற்றுப் பதிவாகியுள்ளனர். நேற்று ஆயிரத்து 891 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் தொடர்ந்து நான்காவது நாளாகவும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1500ஐக் கடந்துள்ளது. கடந்த நான்கு நாள்களில் 6 ஆயிரத்து 800 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 753 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களில் 97 ஆயிரத்து 242 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 13 ஆயிரத்து 824 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-22)

## மருத்துவமனை...

பகுதியில் 36 தொற்றாளர்களும், அம்பலாங்கொடைப் பகுதியில் 35 தொற்றாளர்களும், இமதுவ பகுதியில் 13 தொற்றாளர்களும், ரத்கம பகுதியில் 9 தொற்றாளர்களும், காலி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 தொற்றாளர்களும், போபே பொத்தல பகுதியில் 8 தொற்றாளர்களும், கரந்தெனிய பகுதியில் 4 தொற்றாளர்களும், பலப்பிட்டிய பகுதியில் 3 தொற்றாளர்களும், ஹிக்கடுவ பகுதியில் 4 தொற்றாளர்களும், வெலிவிடிய பகுதியில் 2 தொற்றாளர்களும், உடுகம பகுதியில் 2 தொற்றாளர்களும், அக்மீமன மற்றும் எல்பிட்டிய பகுதியில் இரண்டு தொற்றாளர்களுமாக 114 தொற்றாளர்கள் இவ்வாறு வீடுகளுக்குள்ளேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ வைத்தியர் சந்திம சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தில் 8 கொரோனா சிகிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஆயிரத்து 400 கட்டில்கள் உள்ளன. இவ்வாறு கொரோனாத் தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கட்டில்கள் அனைத்திலும் தொற்றாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். காலி மாவட்டம் மாத்திரமன்றி, பல்வேறு பகுதிகளிலுள்ள தொற்றாளர்கள், காலிக்கு அழைத்து வரப்படுகின்றனர். இதனால், சில நோயாளர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-22)

## இந்தியாவை...

மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் தணிகைவாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். தமிழ் இணைய ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

'இந்தியாவில் ஒரே நாளில் 4 லட்சத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இலங்கையின் நிலைமை இந்தியாவை விட மோசம். இந்தியாவின் சனத்தொகையுடன் பரவும் வேகத்தை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இலங்கையின் சனத் தொகையுடன் பரவலடையும் வேகத்தை ஒப்பிடும்போது, இந்தியாவை விட அதிகமாகவே உள்ளது. இலங்கையில் தற்போது பிரேஸிலில் பரவியதை ஒத்த வேகம் காணப்படுகின்றது' என்றார் ரட்ணசிங்கம்.

உலகில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகம் பாதிப்புற்ற நாடுகளின் வரிசையில் பிரேஸில் இரண்டாம் இடத்தில் உள்ளது. (ஒஇ)

## வடக்கில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடங்களில் நேற்று 748 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 7 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 2 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்.

யாழ்ப்பாணம் [illegible] சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. வவுனியா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் உள்ள ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பூவரசம்குளம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மல்லாவி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## பிளாஸ்ரிக்...

அவர் கொழும்பில் உள்ள அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மட்டுமே பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு உள்ள நிலையில் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் நோயாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இடமாற்றக் கடிதம் கிடைத்துள்ளதை சந்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியபல்லவன் உறுதிப்படுத்தினார்.

"இடமாற்றக் கடிதம் கிடைத்துள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவை உருவாக்குதற்குப் பெரிதும் பங்களித்திருந்தேன். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அதற்குப் பெரிதும் ஒத்துழைத்திருந்தார். எமது மக்களுக்கு சேவை வழங்க வேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற விரும்பினேன். இடமாற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை" என்று சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழிய பல்லவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வெற்றிகரமான பல சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த சத்திர சிகிச்சைகளில் சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழிய பல்லவன் பெரிய பங்காற்றியிருந்தார். தற்போது அவருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை நோயாளர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இடமாற்றம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத் தரப்பினரிடம் வினவியபோது, சில முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைக்களுக்காகவே சத்திர சிகிச்சை நிபுணர் கொழும்பிலுள்ள அமைச்சுக்காரியலத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். இதனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சேவைகளில் எந்தத் தடங்கல்களும் ஏற்படாது என்று மருத்துவமனை நிர்வாகத் தரப்புத் தெரிவித்தது. (எத)

## கிரிக்கெட்...

துன்னாலை மேற்கில் உள்ள விளையாட்டுக் கழகம் ஒன்று கடந்த சில நாள்களாக கிரிக்கெட் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தது. தற்போது உள்ள கொரோனா அபாய நிலைமை காரணமாக பயிற்சிகளை நிறுத்த வேண்டும் என்று அந்த பிரிவுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் கழகத்துக்கு அறிவுறுத்தியிருந்தார். அந்த அறிவுறுத்தலை மீறி நேற்றுக் காலையும் கிரிக்கெட் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரால் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. மைதானத்துக்குச் சென்ற பொலிஸார் பயிற்சியாளரைக் கைதுசெய்தனர். பயிற்சிகளில் ஈடுபட்டவர்களைச் சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். கைதுசெய்யப்பட்ட பயிற்சியாளரை நெல்லியடி பொலிஸ் நிலையம் கொண்டுசென்ற பொலிஸார், அவரை விடுவித்து எச்சரிக்கையின் பின்னர் அவரையும் சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (எ-26)

## 10 ஆண்டுகளின்...

களுக்கான தேர்தல் கடந்த மாதம் 6ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் ஒரு அணியாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஒரு அணியாகவும், மக்கள் நீதி மய்யம் மற்றும் கூட்டணிக் கட்சிகள் ஒரு அணியாகவும், அ.ம.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் ஒரு அணியாகவும், நாம் தமிழர் கட்சி தனித்தும் போட்டியிட்டன. இந்த ஐந்து முனைப்போட்டியுடன் சிலர் சுயேச்சையாகவும் போட்டியிட்டனர்.

வாக்குகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுக் காலை 8 மணிமுதல் எண்ணப்பட்டன. காலை முதல் சீரான ஆதிக்கம் செலுத்திவந்த தி.மு.க 118 என்ற பெரும்பான்மை இடங்களை விட அதிக இடங்களில் முன்னிலை பெற்றது. அந்தக் கட்சி வெற்றிபெற்றதை அடுத்து முதலமைச்சர் வேட்பாளரான ஸ்டாலின் அடுத்த சில தினங்களில் முதலமைச்சராகப் பதவியேற்பார் என்று தெரிய வருகின்றது.

ஜெயலலிதாவின் காலத்தில் ஆட்சிபீடம் ஏறிய அ.தி.மு.க. அவரின் மறைவின் பின்னர் வந்த முதலாவது தேர்தலிலேயே தோல்வியைச் சந்தித்துள்ளது.

'ஆதரவாளர்கள் வீடுகளுக்குள் இருந்தபடியே வெற்றியைக் கொண்டாட வேண்டும். பெருந்தொற்றுக்கு உட்பட்டு விடாதீர்கள். எனவே வெற்றியை வீடுகளுக்குள் இருந்தபடி கொண்டாடி வீட்டையும் பாதுகாப்போம், நாட்டையும் பாதுகாப்போம்' என்று தி.மு.கவின் முதலமைச்சர் வேட்பாளரான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். (ஒ.ம)

## புத்தர் சிலை...

காங்கேசன்துறை கடற்படையினர் வழங்கிய தகவலுக்கு அமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மதுபோதையில் புத்தர் சிலையை உடைத்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும், சந்தேகநபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் மீதே பொருளாதாரச் சுமை

## மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 3

**நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தால், மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். அரசின் பொருளாதாரச் சுமை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வருடம் வரவு செலவு திட்டத்தில் ஆயிரத்து 919 பில்லியன் டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கு வருமானம் போதாமலுள்ளது. ஆனால் அரசோ பொருளாதாரத்தைக் கொண்டு செல்வதற்காக கடன்மேல் கடன் பெறுவதையும், நாணயத்தாள்களை மேலதிகமாக அச்சிடுவதையுமே பிரதான செயற்திட்டமாகக் கொண்டுள்ளது.

கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக மிகப் பாரதூரமான நிபந்தனைகளுக்கும் அடிபணிய வேண்டியேற்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்புதுறைமுக மேற்கு முனையம், கொழும்பு துறைமுக நகரம் உள்ளிட்டவற்றை இந்தியாவுக்கும், சீனாவுக்கும் தாரை வார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. எனினும் இதன் பின்விளைவுகளின் சுமை நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்விளைவுகளால் இன்று தேவையான அளவு பி.சி.ஆர். பரிசோதனைகளைக்கூட முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதே நிலைமையில் நாடு தொடர்ந்தும் பயணிக்க வேண்டுமா என்று மக்களிடம் கேட்கின்றோம்.

நாட்டில் சகல துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மாற்றங்களுக்காக எம்முடன் கைகோர்க்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். -என்றார். (ம-4)

## பொலிஸாரை தாக்கிய 3 பெண்கள் கைது

கொழும்பு, மே 3

நில்வெல்ல பிரதேசத்தில் போதைப்பொருள் சுற்றிவளைப்பை முன்னெடுத்த பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் மூன்று பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரியொருவர் மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேவேளை, திகன பிரதேசத்தில் வாகனம் ஒன்றை சந்தேகத்தின் பேரில் மறித்து பொலிஸார் சோதனையிட முயன்றபோது, பொலிஸார் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதான இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-இ)

## தீ விபத்துக்கள்

கொழும்பு, மே 3

ஹோமாகம தலகல பிரதேசத்தில் விற்பனை நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனை நிலையம் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

அதேபோன்று மொரகஹஹேன, கிரிவத்துடுவ பிரதேசத்தில் அமைந்திருந்த இரண்டு மாடிக் கட்டடத்தில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. ஹொரணை மற்றும் களுத்துறை தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மேலும், ரக்குவானை நகரில் அமைந்துள்ள கடைத் தொகுதியொன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இதன்போது, 4 விற்பனை நிலையங்கள் மீது தீ பரவியுள்ளது. (ஒ-இ)

## விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, மே 3

அம்பலாந்தோட்டை மல்பெத்தாம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் உயிரிழந்த இளைஞனும் இன்னும் ஒருவரும் பயணித்துள்ளனர். வீதியின் குறுக்கே நாயொன்று கடக்க முற்பட்டுள்ளது. அதற்காக மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட, மோட்டார் சைக்கிளின் பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது. சாரதி தூக்கி வீசப்பட்டு காயமடைந்துள்ளார். பின்னால் இருந்த இளைஞன் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். (ஒ-இ)

**இரசாயனவியல் வகுப்புக்கள்**
Chemistry Group & Personal Classes
only for girls.
For both English & Tamil Medium
2021, 2022, & 2023 A/L
Nanthu BSc (Hons), MSc
Jaffna 077 036 6050

**வேலையாள்கள் தேவை**
சட்டரிங், கம்பி, மேசன்
வேலையாள்கள் தேவை. சம்பளம் - 2000 /=
EverythingHere.lk
076 924 1595, 077 635 2469,
077 247 3883

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
Clock Tower Road, Jaffna. 077 017 5346

A/L 2022, 2021,2021 A/L DAY CLASS
ZOOM CLASS
2021 A/L மற்றும் 2020 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது
A/L 2023 புதிய பிரிவு ஆரம்பம்
05.05.2021

முற்றுமுழுதாக தேசிய பாடசாலை A/L தொழிநுட்ப பிரிவு ஆசிரியர்களையும் மற்றும் Technical college விரிவுரையாளர்களையும் கொண்ட முன்னணி கல்வி நிறுவனம்

- தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் - ராகவன் (BSc) - முருகநிரோஜன் (BSc) நிரோஜன் (BSc)
- பொறியியல் தொழிநுட்பவியல் - அருண்குமார் (HNDE) - சிவஜன் (விரிவுரையாளர்) நிசாந்தன் (HNDE)
- உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல் - திருக்குமரன் (BSc in Agri ) - நிரோஜன் (BSc in Agri)
- தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் - உமாகாந்தன் (BIT) - நயன் BSC)
- விவசாயம் - சாரங்கன் (BSc in Agri) திருக்குமரன் (BSc in Agri)
- சித்திரம் - ஜெயந்தன் (BA)
- புவியியல் - S.P. கரன் (BA)
- கணிதம் (7) - மோகன்ராஜ் (BSc)
- ஊடகக்கற்கை - கஜிதரன் - (MA in Mass communication)

நேரடி வகுப்புகள் ஆரம்பித்த பின்னரும் ZOOM வகுப்புகள் இறுதிப்பரீட்சை வரை தொடர்ந்து நடைபெறும்.
077 017 5346

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 07 . 1953



மறைவு 01 . 05 . 2021

## துரைராசா நாகேஸ்வரி

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் (01.05.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், ஸ்ரீரஞ்சன் (இத்தாலி), ஸ்ரீகாந்தன் (லண்டன்), ஸ்ரீகரன், நிலோஜன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மகளிர் விவகார அமைச்சு - வ.மா), கஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், கந்தையாபிள்ளை, கனகலிங்கத்தின் பாசமிகு சகோதரியும், தயாவதனி, புஸ்பரூபி, துர்க்காதேவி, சுதர்சினி, காந்திமதி ஆகியோரின் பாசமிகு மாமியும், ஸ்ரீராம், ரக்ஸனா, யதுசா, விதுஷனா, பவிசா, சஸ்விகன், வருஷணிகா, தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 111 7195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரி[illegible] 361 [illegible]கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03. 05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.